# ஜகதல




ஸ்ரீமதி டி. பி.

ராஜலக்ஷிமி

OFFICE OF

3L
ஊ211, N35CN
N36.210.
189934

## உள்ளுரை.

| நெ. | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர் வருகை ... | 453 |
| 2. | உத்தமக் காதலின் தத்துவ மகிமை | 457 |
| 3. | படிப்பும், பகுத்தறிவும் ... | 463 |
| 4. | அதோ தெரிகிறதே! ... | 466 |
| 5. | கல்வி இன்பம் ... | 473 |
| 6. | பெண்கள் நிலைமை ... | 477 |
| 7. | சிசு வளர்ப்பு 1 ... | 481 |
| 8. | ஹாஸ்யப் பகுதி ... | 483 |
| 9. | குணவாகடம் ... | 485 |
| 10. | மருந்து செய்பகுதி ... | 489 |
| 11. | வேதவியாசர் முதற்காண்டம் | 490 |
| 12. | நாகானந்தன் ... | 493 |
| 13. | செய்தித் திரட்டு ... | 498 |
| 14. | உள்ளூர்ச் செய்தி ... | 500 |
| 15. | வைசிய குலத்தில் விதவா விவாகம் | 501 |

### சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு உள் நாடு | ... | ரூ. 0—8—0 |
| ,, வெளி நாடு | ... | ரூ. 1—0—0 |
| தனிப்பிரதி | ... | ரூ. 0—0—9 |
| ஜீவிய சந்தா | .... | ரூ. 10—0—0 |

புதிதாய்ச் சேருகிற சந்தாதாரர்களுக்கு அவர்கள் பணம் அனுப்பி சந்தாதாரராய்ச் சேருகிற மாதத்திலிருந்து ஒரு வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பப்படும். சந்தாவை மணியார்டரில் அல்லது ஸ்டாம்பாக அனுப்பவேண்டும். வெளி நாட்டினர் இம்பீரியல் கூப்பனாகவும் போஸ்டல் ஆர்டராகவும் அனுப்பலாம். வி.பி. அனுப்பினால் 6 அணா அதிக செலவாகும்.

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| ஒரு தடவைக்கு முழுப்பக்கம் | ரூ. 5—0—0. |
| ,, அரைப்பக்கம் | ,, 3—0—0. |
| ,, கால்பக்கம் | ,, 1—8—0. |

மானேஜர், "சித்தன்", பழனி. S. I.

"சித்தனில்" வெளிவரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.


# "சித்தன்"

பழனி.

ஓர் உயரிய மாதப்பத்திரிகை.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன் றறியேன்"

ஆசிரியர்:— C. P. சாமி.

| மாலை 2. | அக்டோபர். 1936. | மணி 10 |
|---|---|---|


189934

## தலைவர் வருகை.

அகில இந்திய தேசீய காங்கிரஸ் மகாசபையின் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேரு தமிழ்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார் என்பதை யாவரும் அறிவர். அவர் ஒரு பெரிய செல்வச் சீமானின் ஏக புத்திரர். கல்வி அறிவிலும், அரசியல் ஞானத்திலும், உலக அனுபவத்திலும் மேன்பட்டவர். நம் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எல்லாவகையான துயரங்களுக்கும்பரிகாரம் சமதர்மமே என்பதும், அது ஏற்படவேண்டுமானால் ஏகாதிபத்திய ஆசையும், முதலாளித்தன்மையும் ஒழியவே [illegible] அவரது அவா. அதுவே அவரது கொள்கை [illegible] கொள்கை இதர கட்சித் தலைவர்களால் வரவேற்கத்தக்கது. மேலும், ஜாதி, மத, பேதங்களையும் மூடப்பழக்க வழக்கங்களையும் ஒதுக்கித்தள்ளி, சமத்துவமும், சகோதரத்துவமும் நாட்டில் நிலவவேண்டுமென்று எண்ணமுடையவர். காங்கிரஸ் தலைவர் பலருள்ளும் இவர் உயரிய நோக்கமுடையவர். [illegible] ரைச்சிறப்புடன் வரவேற்கவேண்டியது தமிழர் [illegible] கடம்.

இவரின் சமீபகால வாழ்க்கையை நினைக்கும் ஒவ்வொரு [illegible] உள்ளமும் கலங்கத்தான் செய்யும். அந்தோ! பரிதாபம். தமது அருமைப் பிதாவையும், ஆருயிர்த் துணைவியையும் இழந்தும் சகிக்கொணாத துயரமத்தியில் அவைகளைப் புறக்கணித்து தேசசேவையே தமது லக்ஷியமெனக் கொண்டு உழைத்து வருகிறார் என்றால் இவரைப்பற்றி வேறு என்ன கூறவேண்டும். இவர் தலைவராய் வந்த சொற்ப காலத்திற்குள்ளேயே தேச மக்களிடை ஓர் உணர்ச்சியை உண்டாக்கி காங்கிரஸிற்கு புத்துயிர் அளித்திருக்கிறார். இவரின் சேவையைப் பாராட்டியே இவரின் தலைமைப்பதவி காலத்தை இன்னும் சில வருடங்கள் நீடிக்கச்செய்ய வேண்டும் என்ற அபிப்பிராயம் உலாவிவருகிறது. இவ்வொரு விஷயமே பண்டிதரின் சிறப்பிற்குப் போதிய சான்றன்றோ! இவரின் தென்னாட்டு விஜயம் நம் வாலிபர்களின் மனதைப் பிரகாசிக்கச் செய்யும் என்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை.

காங்கிரஸ் நிர்வாகத்திலுள்ள ஊழல்களைக் கண்டித்து பலர் மஹஜர்மூலம் பண்டிதர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றனர். பண்டிதர் காங்கிரசிலுள்ள ஒரு சில தலைவர்களைப் போல் குறுகிய நோக்கம் உடையவரல்ல. விசால நோக்கத்தையே உடையவரானதால் மஹஜரைக் கவனித்து வேண்டுவன செய்வார் என்றும், தமிழ் நாட்டுக் காங்கிரஸ்வாதிகளில் சிலரிடையே சமீபகாலத்தில் அவநம்பிக்கையும், துரோக சிந்தையும் முளைத்திருக்கிறது என்ற கூச்சல் பலமாயிருப்பதால் அவைகளையும் களைந்தெறிய தலைவர் வழிதேடுவார் என்றும் நம்புகிறோம்.

இவரை ஒரு சாரார் பகிஷ்கரிக்கின்றனர். இந்த முறை திருப்திகரமானதல்ல. இதை விடுத்து நாட்டின் தற்போதய நிலைமையை நன்குணர்ந்து கொள்ள பண்டிதருக்கு வசதி அளித்து, பதவி ஏற்பு சம்பந்தமான நமது பலவாறான எண்ணங்களையும் அவர் அறிய எடுத்துக்காட்டலே சிறப்புடைத்து. ஆதலால் இதர கட்சித் தலைவர்களும் இவரின் வரவேற்பில் கலந்து, தங்கள் மகிழ்ச்சியைக் காட்டிக் குறைகளை எடுத்தோதுதல் நலமெனக் கருதுகிறோம்.



பொதுவாக எக்கட்சித் தலைவர்களாயினும், கொள்கையிலும்,, வேலைத்திட்டத்திலும் மாறுபட்டு இருப்பினும், நாட்டின் நலங்கருதியே தங்கள் தங்கள் சக்திக்கேற்ப தொண்டாற்றி நமக்குப்பயன் அளித்து வருகின்றனர். சாதாரணமாகப் பொதுத் தொண்டில் பிரவேசிக்கும் எவருக்கும் கஷ்டமில்லாமல் இல்லை. ஆதலால் இவ்வுண்மையை உணர்ந்து நமக்குள்ளிருக்கும் அபிப்பிராயபேதங்களை விடுத்து யாவரும் ஒற்றுமையாயிருந்து, மாபெரும் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவை வரவேற்போமாக.

---

## ஜவஹர்லால் சுற்றுப்பிரயாண விபரம்.

நாளது 10-உ கிருஷ்ணகிரி, நாமக்கல், இரவு திருச்செங்கோட்டில் தாமதம்.

,, 11-உ பவானி, கோபி, அவனாசி, திருப்பூர், பல்லடம் சூலூர், இரவு கோயமுத்தூர்.

,, 12-உ பழனி, திண்டுக்கல் பெரியகுளம், இரவுமதுரை

,, 13 உ திருமங்கலம், கோவில்பட்டி, திருநெல்வேலி, சங்கரன்கோயில், ராஜபாளையம், விருதுநகர்.

,, 14-உ அருப்புக்கோட்டை, மத்தியானம் மதுரையில் ஓய்வு; திருப்பத்தூர், காரைக்குடி,

15-உ திருச்சி முதலிய இடங்கள். 16-உ தஞ்சாவூர் முதலிய இடங்கள். 17-உ சிதம்பரம் முதலிய இடங்கள்; இரவு சென்னைக்குப் பிரயாணம்.

### பண்டிதர் 12-உ காலை 8-முதல் 8-30 மணி வரை பழனியில் தாமதம்

### காந்திமைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

குறிப்பு:- குறுகியநாள் பிரயாணத்திலும் இந்நகருக்கு விஜயம் செய்யுமாறு இந்நகர் காங்கிரஸ் கமிட்டியார் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது.

# சந்தாதார்க்கு அறிவிப்பு.

நம் பத்திரிகை அபிவிருத்தியில் ஆர்வமும், அதன் வளர்ச்சியில் நன்னம்பிக்கையும் கொண்ட பல அன்பர்களது வேண்டுகோளுக்கு இணங்கி நமது பத்திரிகையை இப்போது இருப்பதைக் காட்டிலும் பெரிய அளவில் அநேக படங்களுடன் இன்னும் சிறந்த முறையில் பிரசுரிக்க முடிவு செய்து உள்ளோம். தமிழ்நாட்டில் இவ்வளவு அதிக பக்கங்களோடு மிகவும் குறைந்த 8-அணா சந்தாவில் நடைபெறும் தமிழ் மாதப்பத்திரிகை வேறொன்றும் இல்லை என்பதை நாங்கள் சொல்லாமலேயே அறிவீர்கள். 8 அணாவில் தபால் சிலவு 3 அணா போக 12 புஸ்தகங்களின் விலை அணா ஐந்தேதான். இதில் அச்சுக்கூலி காகிதச்செலவு எவ்வளவாகும்? மீதம் என்ன? இது அனைவருக்கும் தெரியாமற்போகாது. என்றும் தோன்றி மறையும் பல பத்திரிகைகள் போலல்லாது எமது "**சித்தன்**" தனது 2-ம் ஆண்டைக் கடக்க இன்னும் இரண்டே மாதங்கள்தான் இருக்கின்றன.

அன்பர்கள் பலர் 2 வருடமாகவும், சிலர் 1 வருடமாகவும் நம் பத்திரிகை பெற்றுவந்தபோதிலும் சந்தாவை அனுப்பாது காலதாமதம் செய்து வருவது மிகவும் வருந்தத்தக்கதே. ஒவ்வொருவருக்கும் தனித்தனியே எழுத முடியாமைக்கு விசனிக்கிறோம். ஆகையால் இதுவரை சந்தா அனுப்பாதவர்கள் உடனே அனுப்பி முன் போலவே சித்தனை ஆதரிக்க வேண்டுகிறோம். பத்திரிகை தேவையில்லை என்று எண்ணுபவர்கள் இதுவரை பெற்றுள்ள பத்திரிகைக்கு சந்தாவை அனுப்பிவிட்டு இனிமேல் பத்திரிகை வேண்டாமென்பதையும் தெரிவித்துவிடவேண்டும். அனாவசியமாக எங்களுக்கு நஷ்டத்தை உண்டாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம்,

**மானேஜர், சித்தன்.**

# உத்தமக் காதலின் தத்துவ மகிமை.

**R.** நடராஜன்.

இளவேனிற்காலத்தில் சூரியன் தன் கிரணங்களை ஒளி அம்பாக விளக்கி நாலாபக்கமும் தூவிய வண்ணமிருந்தான். மாலை மணி 5 என்பதற்கு கோவில் மணி 'டாண் டாண்' என்று ஒலித்து ஒவ்வொருவருக்கும் தெரியப்படுத்தியது. நறுமணம் தரும் அழகிய பூக்கள் நிறைந்த ஓர் சோலையில் ரதியும் மன்மதனும் பூலோக வாசம்செய்ய எண்ணி அங்கு வந்துளரோ என ஐயுறும்படி தம்பதிகள் இருவர் கைகோர்த்து மிக உல்லாச நடையுடன் ஆனந்தமாகவும், மிக்க குதூகலமாகவும் பேசிக்கொண்டே சென்றனர். இவ்விருவரையும் பார்த்தால் தக்க பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளைப்போலவும், கம்பீரப்பார்வை உடையவர்களாயும் காணப்பட்டார்கள். இவ்விருவரில் காதலனைவிட காதலியே சிறந்த அழகும், குணமும் ஒருங்கே பெற்றிருந்தனள். காதலி தன் செப்பவள வாய் திறந்து 'பிராணேசா! உம்மை அன்றி வேறொருவரையும் கரந்தொடச் சம்மதியேன். இது முக்காலுமுண்மை. தங்கள்மீதுள்ள என் உயரிய காதலுக்கு முன் என் சிற்றன்னையாவது, அவரது சகோதரராவது என்ன செய்யமுடியும்? அன்பரே! நேற்று நடந்தேறிய விஷயத்தை எண்ணிக் கைசோர விடவேண்டாம்' எனக்கூறியபடியே அவனது கரத்தை எடுத்து முத்தமிட்டாள்.

இதனைச் செவியுற்ற வாலிபன் பூரித்துப் புளகாங்கிதம் அடைந்து 'ப்ரியே! எனது உயிர் உன் கையில் இருக்கிறது என எண்ணிக்கொள். உன் சிற்றன்னை உன் வாணாளை வீணாளாக்கும் சாமர்த்தியம் உடையவள் என்பதை நீயறியாயோ?' எனச் சிறிது வாட்டமுகத்துடன் கூறினான்.

தன் காதலன் மனமுடைந்து பேசுவதையறிந்த பெண் அணங்கு அருமைக் காதலா! எத்தனை தரம் பன்னிப்பன்னிக்கூறுவேன். உலகமே புரளினும் வேறொருவரை மாலை

இடேன். இதோ சத்தியம் செய்கிறேன்' எனக்கூறி அவனது கரத்தில் தன் கையையடித்துச் சத்தியம் செய்தனள்.

அவ்வமயம் பின்னால் யாரோ ஒருவர் 'பேஷ்! மெச்சத்தான் வேண்டும்; நாதியற்ற தத்தாரியாகத் திரியும் நாடோடிப்பயலிடத்தில் உள்ள அன்பை! என்ன? என் தமக்கையும் நானும் காலில் விழாக் குறையாகக் கூறியும் மறுத்த நீ இப்பேர்ப்பட்ட இழிதொழிலைச் செய்வாய் என நான் எண்ணவேயில்லை. சண்பகம்! இந்தக்கனகன் உள்ளவரை உன் எண்ணம் ஈடேறாது; ஜாக்கிரதை' என்று கர்ணகடூரமாகப் பேசி அவ்விருவரையும் விழுங்குபவன்போல உற்றுப்பார்த்தான். இவை அனைத்தையும் கண்ணுற்ற சுந்தரராஜுவுக்கு கோபம் பொங்கி வந்தது. அவனை நோக்கி கோபநகை நகைத்து 'செல்வராஜர் மாளிகையில்-ஜாக்ரதையாய்ப்பேசும்! என்னை எதிர்த்தால் ஓர் புழுவை நசுக்குவதுபோல் நசுக்கிவிடுவேன்' எனச் சிறிது கோபத்துடனும், சொன்ன வார்த்தையைத்தவறாது செய்யும் ஆற்றலையுடைய சம்பூரண வீரக்களை பொருந்திய முகத்துடனும் கூறவே, இவ்வளவு நேரம் வாய்பேசிய கனகன் மந்திரத்தால் கட்டுண்ட பாம்புபோல் அசையாதவனாய் இடியோசையைக் கேட்ட நாகம்போல் பதைபதைத்தான். ஆனால் ஒன்றையும் வெளிக்காட்டாமல் 'எல்லாம் பின்னால் தெரியும்' எனத் தாழ்ந்த குரலில் கூறியபடியே மெல்ல நழுவினான். அவன் சென்றதும் காதலர் இருவரது முகங்களும் வெற்றியால் மலர்ந்தது. ஒருவரை ஒருவர் ஆலிங்கனம் செய்துகொண்டனர்.

பின் அவ்வாலிபன் 'கண்ணே! நான் அவன் கூறும்படியான உண்மை சுந்தரராஜுவல்ல. நீ எண்ணிவந்த தேவராஜுமல்ல. தற்காலத்தில் சப் இன்ஸ்பெக்டர் வேலையும், துப்பறிதலையும் ஒருங்கேயுடைய துரைராஜ் என்பதை அறி' என்று மிக சாந்தத்துடன் கூறிப் புன்முறுவலுடன் அவளது வதனத்தைத் தன் கரத்தால் மெல்லெனத் தட்டினான்.

இதனைக்கேட்ட அம்மான் விழியாள் திகைத்து வியப்பே வடிவாய் மாறி ஓவியம்போல் அசையாது நின்றனள். பின் ஒருவாறு தேறியவளாய் ஈனசுரமான குரலில் 'இஃதுண்மையானால் நான் பெரும் பாக்யவதியே எனக்கூறினாள்.



'கண்ணே! இன்னும் சந்தேகம் வேண்டாம்; இதோ பார்' என்று ஒரு கத்தியை எடுத்துக்காட்டவே 'ஆ! நான் பாக்கியவதி என்பதில் சந்தேகமே இல்லை' எனக்கூறி அவனை இறுகத்தழுவினாள். அக்கத்தியின் மேல் பிடியில் வைரக்கற்களால் 'துப்பறியும் துரைராஜு' என்றும், 'மாஜி கவர்னரால் பரிசளிக்கப்பட்டது' என்றும் செதுக்கப்பட்டிருந்தன. பலர் பேசிக்கொண்டு வருவதைக் கேட்ட இருவரும் பிரியா மனதுடன் பிரிந்தனர்.

நிற்க, மறுநாள் பூரண சந்திரன் தகதகவென்று உதித்தாற்போன்று கூறொணா அழகுடன்கூடி விளங்கிய சண்பகம் மாசிமாதத் தமிழரசைப் படித்து ஆனந்தித்துக்கொண்டு இருக்கையில் அவளது சிற்றன்னை மிகுந்த உக்ரமான கோபத்துடன் 'அடீ! சண்பகா! உன் யோக்கியதை வெகு நன்றாய் இருக்கிறது. வீதியில் திரியும் தரித்திரனைக் கல்யாணம் செய்துகொள்ளச் சத்தியம் வேறு வேண்டுமோ? அடி! பேதாய்! தந்தை தாயற்று விளங்கும் உன்னை நல் வழியில் சேர்க்க எண்ணி என் தந்தையின் குலவிளக்கான கனகத்திற்கு உன்னை மணம் செய்ய எண்ணி இருக்கிறேன். உன் சத்தியமும், சம்பிரதாயமும் என்னிடமா செல்லும்? உன் பிடிவாதத்தை தூர வை. இன்னும் ஒரு வாரத்தில் கனகம் உனக்கு மாலையிடாவிடில் என் பெயர் லீலா அல்ல' என மிக்க கோபத்துடனும் துடியாகவும் கூறினாள்.

இதனைச்செவியுற்ற மங்கை வேடன் குரலோசை கேட்ட மான்போல் பதைபதைத்து ஒன்றும் தெரியாதவளாய், கதிகலங்கியவளாய் நிற்கும்பொழுது கனகமும் வந்து சேர்ந்தான். என் செய்வாள் பேதைப்பெண்? கனகன் தன் தமக்கையை நோக்கி 'இன்னும் ஒரு வாரத்தில் புதுச்சேரி போய் இவள்கொட்டத்தை அடக்கி, அங்கு மணம்செய்யவேண்டும்' என்று கூறவே லீலாவுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று 'கனகு! உன்னிஷ்டப்படி அடுத்த புதன்கிழமை புதுச்சேரி செல்வோம். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு செய்வோம். இச்சண்டியைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்' எனக் கூறிவிட்டு தன் வேலையைக் கவனிக்க வெளியே சென்றாள்.

கனகன், சண்பகம் தனியாயிருப்பதை அறிந்து அவள் அருகில் வந்து 'சண்பகம்! என்னை நீ மணம் செய்துகொண்டால் என்னிடமுள்ள ஏராளமான சொத்துக்கு பாத்தியதை அடைவாய். அத்தரித்திர சுந்தரராஜனை மறந்துவிடு' என்று கூறியபடியே அவளது கரத்தைத் தீண்டப்போனான். உடனே அடிபுண்ட வேங்கைபோல் சிலிசிலிர்த்து 'அடே! கொலைகாரப்பாவி! தூர விலகிப்போ. அவர் தரித்திரர், பணக்காரர் என்பது உனக்கு வேண்டியதில்லை. உனக்குத் திரண்டசெல்வம் வந்த விதம் எனக்குத்தெரியும். உயிருடன் வாழவேண்டுமானால் என்னை அடியோடு நீ மறந்துவிடு' என்று சண்பகம் கூறவே தன் தைரியத்தை இழந்தவனாய் நாலடி பின் சென்றனன்.

'அடீ! அச்சண்டாளனைச் செல்வராஜர் சகோதரனிடம் போய்ச்சேரும்படி செய்துவிட்டுப்பின் உன்னிடம் வருகிறேன்' எனக்கோபமாய்க் கூறிச்சென்றான். அவன் சென்றதும், அம்மடவன்னம் 'தனது ஆருயிர்க் காதலருக்குத் துன்பஞ்செய்ய எண்ணியுள்ளான். ஆ! என்னால் என் காதலருக்கும் தீங்கு நேரும்போலிருக்கிறதே; என் செய்வேன்! ஜெகதீசா! ரக்ஷிக்கவேண்டும்' என்று வணங்கினாள். அத்தருணம் அவளது பொற்கரங்களை யாரோ பிடிப்பதாகக் கண்டனள். அவள் அதியாச்சரியப்படும்படி தன் உள்ளத்தைக்கொள்ளை கொண்ட உத்தமக் காதலன் துப்பறியும் துரைராஜ் என்பதை அறிந்தாள்.

அதியாச்சரியத்துடன் 'ஆ! கருணை கர்த்தரே! எப்படி வந்தீர்கள்? நீங்கள் வரும்பொழுது வேலைக்காரர்கள் யாரும் இல்லையா?' என்று வினவினாள். 'கண்ணே! அதோ பார்' என்று துப்பறியும் துரைராஜ் காண்பிக்கவே அவ்வீட்டு முருகனின் காலை உடையைக் கண்டனள். 'ஆ! அறிந்தேன்; வேலைக்கார முருகன் உடையுடுத்து வந்து இங்கு நடந்த சம்பாஷணையை அறிந்தீர் போலும்' என்று மொழிந்து அவனை ஆலிங்கனம் செய்துகொண்டாள். பின்னர், அவ்வாலிபன் 'காதலி! கனகன் உன்னை அடையும் பொருட்டு சில நாள் சிநேகிதம் செய்துவந்த செல்வராஜர் சகோதரனைக் கொலைசெய்து சுமார் 10 லட்சம் ரூபாய்க்குமேல் கொள்ளை அடித்துக்கொண்டு வந்துவிட்டதாகத் தெரிகிறது. முக்கிய



மான துப்பு ஒன்று தேவையாயிருக்கிறது. நான் சென்று வருகிறேன். என்று கூறிப் புன்முறுவலுடன் காதற்கண்களால் பார்த்தபடியே முருகனுடை அணிந்து வெளியேறினான்.

... ... ...

சண்பகம் ஓர் நாள் தினசரிப் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும்போது துப்பறியும் துரைராஜ் கொல்லப்பட்டார் என்ற செய்தியைப்படித்ததும் ஆவெனக்கூவி அடியற்ற மரம்போல் சாய்ந்தனள். இவளது ஆற்றொணாத்துயரத்தைப்போக்க யாரும் முன் வரவில்லை. ஆ! அச்சண்டாளன்-கொலையே தொழிலாக உடைய கனகன் செய்த படுமோசம் என்று நினைத்துப் பழிக்குப் பழிவாங்க உறுதி கொண்டாள். அன்றையத் தினத்திலிருந்து ஊண் உறக்கமின்றி நடைப்பிணம்போல் வாடி வதங்கினாள்.

சின்னாள் கழிந்தது; கனகன் வெற்றிகரமான முகத்துடன் புதுச்சேரி பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்யலானான். ஒன்றும் செய்ய இயலாத சண்பகம் தற்கொலை புரிந்துகொள்வதென்று தீர்மானித்தனள். அன்று மாலை தன் காரியத்தை நிறைவேற்ற எண்ணி காலையில் கடவுளைத்தொழுது தன் விதியைநொந்து வருந்தலானாள். துக்ககரமான சம்பவம் நிகழும் மாலை நேரமும் வந்தது. அவளது முகம் சவம்போல் வெளுத்தது. 'ஆ! நேசக்காதலா! சண்டாளியாலல்லவா இறந்தீர். இன்னும் சிறிது நேரத்தில் உம்மையடைய நானும் வந்துவிடுகிறேன். உம்முடைய புகழைக்கேட்டு ஆனந்தமடைய எண்ணிய எனக்கு இத்துக்ககரமான செய்தி கேட்டு என் வாழ்நாள் முடிவடையும் காலம் வந்துவிட்டது' எனப்பலவாறு எண்ணமிட்டு அருகிலிருந்த மேஜையின்மேல் கண்ணாடி டம்ளரில் கலக்கி வைக்கப்பட்டிருந்த விஷப்பாலைக் கண்டனள். 'தற்சமயம் நீ தான் உதவ நேரிட்டது. நீ உதவியதும் என் காதலனின் பாதத்தையடைவேன் என்பது நிச்சயம். இதோ நானும் வருகிறேன்' எனக்கூறிக்கொண்டே கண்ணாடி டம்ளரை எடுக்க கரத்தை நீட்டினாள். அவ்வமயம் 'டணீர்' என்ற சப்தம் கேட்டது. சண்பகத்தின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தது. ஏன்? டம்ளர் சிறிய இரும்புக் குண்டால் அடிபட்டு உடைந்துவிட்டது. 'என்ன ஆச்சரியம்!

இக்ஷக்ஷணமே உயிர்விட எண்ணிய எனக்கு இவ்விதம் நேர்ந்தது யாதுகாரணத்தாலோ? அறியேன். எல்லாம் பார்ப்போம்' என்று மிக்க சோகத்துடன் அப்படியே சாய்ந்தாள்.

... ... ...

புதுச்சேரி பிரயாணத்திற்கு ஏற்பாடுகள் முடிந்து அன்றிரவே புறப்படுவதென்றும், சண்பகத்தைக் கட்டித்தூக்கிச் செல்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. மதறாஸ் சென்ட்ரல் ஸ்டேஷன் கடியாரம் இரவில் மணி 9 அடித்தது. பிளாட்பாரத்தில் லீலாவதியும், கனகனும், அவனது பெற்றோரும், தோழர் சிலரும், குண்டுக்கட்டாகக் கட்டுண்டிருந்த சண்பகமும் இருந்தனர். கனகனும், லீலாவதியும் மிகுந்த சந்தோஷத்துடன் வேண்டிய ஏற்பாடுகளைச்செய்தும், வேலைக்காரர்களை அதட்டிக்கொண்டிருந்தனர். அவர்கள் திடுக்கிடும்படி நான்கு போலீஸ் வீரர்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் இவர்களைச் சூழ்ந்துகொண்டு கனகனையும் மற்றவர்களையும் பிடித்துக்கொண்டனர். ஒரு பாவமும் அறியாத லீலா 'என்ன அனியாயம்! நல்ல காரியத்திற்குப் போகும்போது ஏன் இவர்களைப் பிடிக்கவேண்டும். விடுங்கள்' என ஆரவாரித்தனள். உடனே சப் இன்ஸ்பெக்டர் கடுங்கோபத்துடன் 'அம்மா! வீண் கூச்சல் வேண்டாம். இவன் செல்வராஜர் சகோதரனைக்கொன்று பணத்தை அபகரித்து வந்ததுமன்றி துப்பறியும் துரைராஜ் என்றெண்ணி அவர் படுக்கையில் படுத்திருந்த நாயைக் கொன்றுவிட்டான். ஆகையால் இவனை அரசாங்க உத்திரவுப்படி கைது செய்துள்ளேன்' எனக் கூறியதும் 'என் சகோதரன் கொலைகாரனே?' என்று வேரற்ற மரம் போல் லீலா சாய்ந்தாள்.

கனகன், சண்டாளன் பிழைத்துக்கொண்டானே, சண்பகம் வெண்பகமாகப் போய்விட்டது, தானும் அகப்பட்டுக் கொள்ள நேரிட்டது என்று எண்ணி மனமுடைந்தான். சண்பகம் மூர்ச்சித்திருந்ததால் நடந்த விஷயங்களை அறியமுடியவில்லை. மறுநாள் காலையில் தன் இல்லத்தில் தனது மஞ்சத்தில் படுத்திருக்கவும், என்றும் காணமுடியாதென முடிவு செய்திருந்த தன் காதலன் தன்னருகில் இருப்பதையும் அறிந்து மிக்க வியப்புடன் நோக்கியபடியே அவன்மீது சாய்ந்தனள்.

# படிப்பும், பகுத்தறிவும்.

(மு. கா. அம்பலவாணன்.)

---

(420-ம் பக்கத்தொடர்ச்சி)

சென்ற இதழில் படித்தலின் அத்யாவசியத்தையும், அவற்றின் உயரிய மேம்பாட்டையும், ஒருவாறு விளக்கிக் கூறியுள்ளோம். படிப்பும் பகுத்தறிவும் என்றதில் படித்தலாலாகிய பயன், பகுத்தறிவு பெறுவதென்பதே முறையென்பதை, இக்கட்டுரையான் ஒருவாறு எடுத்துக்காட்டுவாம். எவ்வாறெனில், அந்நன்நாட்டு மொழிகளை பிழையறக்கற்ற முழுமகன் எவனோ, அவனுக்கே சிறந்த அறிவு விளக்கம் தோன்றும். அறிவுவிளக்கம்பெற்றவன்எவனோ அவனுக்கே, நன்மையின்னது தீமையின்னது என்று பகுத்தறிந்து கொள்ளும் சக்தி வரப்பெறும். அச்சக்தியே, மனிதனை நேர்வழியிற் செயலாற்றத்தூண்டும். கல்வி கேள்விகளிற் சிறந்த முழுமகன் ஒருவனாலேயே, அந்நன்நாட்டு மொழிகளில், மக்களின் பழக்க வழக்கங்கட்கேற்ப, அநுபவத்திற்கொத்த, பற்பல அறிவியல் நூல்களையும், ஓவியம் முதலிய சிற்பசாத்திரங்களையும் இயற்றப்படுகின்றன. அக்கலைகளையே மக்கட் கூட்டத்தினர் வேதம் என்றும், ஆகமபுராணவிதிகாசங்களென்றும், தர்மசாத்திரமென்றும் போற்றுகின்றனர். மேற்கூறிய வேதாகமங்களும், தர்மசாத்திரங்களும் மனிதன் அறிவுவிளக்கத்திற்கு எக்காலத்தும் முரணின்றி பெரும்பாலும், ஒத்துவருவனவாயில்லை. பண்டைத் தனித்தமிழ் நூல்களாம், தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள் முதலிய ஒரு சில நூல்களேயன்றி மற்றைய நூல்கள் பகுத்தறிவுக்கொத்ததாயும், அறிவுவிளக்கத்திற்குப்பொருந்துவனவாயும் இல்லை. பண்டைக்காலத்து மனிதனை நேர்வழிப்படுத்தும்

---

ஏழாவது நாள் துப்பறியும் துரைராஜுவுக்கும், சண்பகத்திற்கும் பல பெரியோர்கள் முன்னும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முன்னும் திருமணம் மிக்க சிறப்பாக நடந்தது. அதேநாள் கனகத்திற்கு தீவாந்தர சிக்ஷை கிடைத்தது.

சட்டப் புத்தகமாய் விளங்கிய மனுதர்ம சாத்திரம், இன்று பகுத்தறிவுடைய மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. இத்தகைய மாறுபாட்டிற்காய காரணம் சில கீழே கூறுவாம். வேத நூற்களை பகுத்தறிவுடைய மக்கள் யாவரும் பயிலுதற்குரியவரேயாவர். இக்கூற்று எல்லா மதத்தினர்க்கும் உடன்பாடேயாயினும், நம் இந்து மதத்திற்கு மட்டும் உடன்பாடன்று. ஏனெனில், மனிதச் சட்டமாய் விளங்கும் மனுதர்மசாத்திரத்தில் இவற்றை முற்றும் விலக்கியிருத்தலேயாம். பின் யாருக்கே அவை உரிமையுடையதென்னின், ஆரியவகுப்பினருள் ஒருவராய் பிராமணருக்கே உரிமையுடையனவாய் இருக்கின்றன. இக்கூற்று பகுத்தறிவுடைய மக்கட் கூட்டத்தினரால் வெறுக்கத்தக்கனவாமன்றோ. மனுதர்ம சாத்திரங்களில் விதித்துள்ள கீழ்மையான பல அநீதிக் கொள்கைகளை பல சீர்திருத்தப் பெரியார்கள் அவ்வப்போது, பலர் பல பத்திரிகை வாயிலாகவும், சுற்றறிக்கைகளினாலும் பொதுமக்கட்கு நன்கு எடுத்துக்காட்டி விளக்கி உள்ளார்கள். ஆகவே அவற்றை ஈங்கு எடுத்தாளுதல் மிகையெனக் கருதலோடு, அச்சாத்திரமும், அச்சாத்திரங் கூறியுள்ள வேதாகமங்களும் ஆரியவகுப்பினர் தங்கள் பிழைப்புநலங்கருதித் தொகுத்தவையென விடுத்து, அவை முற்றும் தமிழ் மக்களாய நமக்கு, தனிப்பட்ட நீதிசாத்திரமல்லவையென்றும் இம்மட்டோடு நிறுத்தி மேற்செல்வேம்.

இவ்வுலகத்தின் எந்நாடு முற்போக்குடையனவாய் இருக்கின்றனவோ அந்நாடு, தன்னகத்தே பகுத்தறிவுடைய மக்களைக்கொண்டனவாய் இருக்குமென்பது கற்றறிந்தார்களின் துணிபு. சென்ற ஒரு நூற்றாண்டிற்குள் வீறிட்டெழுந்தநாடுகள் இரண்டு. அவை ருஷியாவும், ஜப்பானுமே ஆகும். இவ்விரு நாடுகளும், சொற்பகாலத்தில் அதியுன்னத நிலைமையை அடைந்திருக்கின்றனவென்பதை, எல்லாத் தேச சரித்திராசிரியர்களும், கற்றறிவாளரும் கூறுவர். இத்தகைய முற்போக்குக்கு அவர்களின் தெளிந்த கல்வியறிவும், அவற்றாலாய பகுத்தறிவின் பயனுமேயாம். தவறிய மக்களைக் கசாய்க்கனுப்பிய ருஷியனும், சுவையுடைய ஆவின்பால் தம்மக்கட்கூட்டின் அவை இறந்துபடுமென்னும் ஜப்பானும் இன்று எத்தகைய நிலையில் இருக்கின்றனவென்பதை நந்தமிழ்நாட்டிளைஞர் நன்குணர்தல்வேண்டும்.



தமிழன்பர்களே! நந்தமிழ் நாடு, எத்தகைய நிலையில் இதுகாறும் தம் பகுத்தறிவைச் செலுத்திவந்திருக்கின்றனவென்பதை உணருங்கள். நீ தாழ்ந்தவன் - நான் உயர்ந்தவன் என்பதிலும், உம்மதத்தினும் எம்மதம் மேன்மையுடையனவென்பதிலும், சைவம் - வைணவம் இவற்றில் எவை புனிதத்தன்மையுடையனவென்பதிலும், திருநீறு - திருமண் இவற்றில் எது முழு மகிமையுடையனவென்பதிலும், வடகலை - தென்கலை இவற்றில் எவை பரிசுத்தமுடையனவென்பதிலும், ஆணுக்கும் - பெண்ணுக்கும் வெவ்வேறு நீதி வழங்குவதிலும், பழக்கவழக்கமென்னும் படுகுழி பார்ப்பதிலும் நம் அருமந்த காலத்தை வீணே பாழ்ப்படுத்தி, மேயோ முதலிய மேனாட்டுப் பெண்களும் எள்ளி நகையாடுதற்கான முறையில், நம் தமிழ்நாடு தம் பகுத்தறிவை வளர்த்து வந்திருக்கின்றனவென்பது கண்கூடு.

இன்னும் நம் தமிழ்நாட்டின் சுயநல வேட்டை, உத்தியோக மோகம், அடிமை வாழ்க்கை, சுதந்தர வேட்கையின்மை முதலியன மிக்கு மலிந்துகிடக்கின்றன.

அன்பர்களே! நம் நாட்டு மக்களின் வாழ்க்கை, எத்தகைய நிலையில் உள்ளன. பிறநாட்டைக் காட்டினும் நம்நாடு வறுமை வாய்ப்பட்டு வதங்குவதென்னை? என்ற உயரிய நோக்கம், நமது இரத்த நாடியிற் செல்லவில்லையன்றோ! நம் அருமந்த பெரும் திறனைத்தும் சாதிச் சண்டைகளினும் - சமயப் பிணக்குகளினும் அநுபவங்கட்கும், யுக்திக்கும், பகுத்தறிவுக்கும், ஒரு சிறிதும் பொருத்தமில்லாத மனுதர்ம சாத்திரம்போன்ற சில சுயநலக்காரர்கள் எழுதிவைத்த ஏட்டுப் படிப்பிற்கும் நம்மரும் பெரும் பொருளாம் பகுத்தறிவைச் செலவிட்டு வந்தோமேயன்றி, நாட்டு முன்னேற்றத்திற்கோ, மொழி முன்னேற்றத்திற்கோ செலவிட்டோமில்லை. ஆகவே, இதுகாறும் கூறியவற்றுள் படித்தலாலாகிய பயன், பகுத்தறிவு பெறுவதென்பதைப் பெற்றோமிலை. வீர இளைஞர்களே! இனியேனும் நமது கல்வியை அறிவு விளக்கத்திற்கும், தேச விடுதலைக்கும் செலவிட்டு, பகுத்தறிவு பெற்று முற்போக்குடையவர்களாய் விளங்குவோமாக.

(தொடரும்.)

# அதோ தெரிகிறதே!

(பொருளூர், **R. P.** ராஜன்.)

**வா**னத்தின் நீர்கொண்ட மேகத்தினாலும், மழை தாரை தாரையாகச் சொரியும் வேகத்தினாலும், எங்கும் இருள் சூழ்ந்து தோன்றும் காலம். திசைகள் ஒன்றையொன்றுநோக்கி நகைப்பனபோல் மின்னற் கொடிகள் எழுந்து மறைந்தன. கருங்கடல் வானத்திலேறி அலறுவதென இடி கர்ஜனை முழங்கிற்று. காவிரி தேவி செந்நீர் கரைபுரள ஓடி கடலிற் சங்கமமாகிக்கொண்டிருந்தாள். அங்கு அருகிலிருந்ததோர் அரண்யத்தையும், கருங்கடலின் பெரும் அலைகளை எழுப்பியும், உஸ் எனும் பேய்க்காற்று அலப்பிச்சென்றது. சந்தியாகாலம் நெருங்குவதையும், கதிரவன் மேற்குக்கடலில் இளைப்பாற மறைவதையுமறியாத ஒரு பூங்கொடி, தன்னை மறந்து அவ்வரண்யத்தில் தன்னந்தனியாக ஏன் தவிக்கவேண்டும்? அந்தப் பயங்கர மழைகாலமும், அன்று கடலிலெழுந்த கொந்தளிப்பும், கண்டோர் உள்ளம் கலங்குமென்பது திண்ணம். எனினும் கடலருகில் அவ்வரண்யத்தில் இருந்த பெண்மணி தன்னை நோக்கி கோஷிக்கும் பெருங்கடலை கண்களில் நீர்ததும்ப இருகரமும் கூப்பி வணங்குவதும், பின்பு சாவதானமாக அங்கு கிடக்கும் சுள்ளிகளைப் பொறுக்குவதும்—மலர்களைப் பறிப்பதுமாகவே அஞ்சா நெஞ்சுடன் சென்றுகொண்டிருந்த அவளுக்கு என்ன மனோதைரியம் இருக்கவேண்டும்! உண்மையில் அம்மங்கைக்கு இப்போது தன் ஞாபகமே இல்லை. அவளது தூய உள்ளம் எங்கேயோ சென்று இன்பக் கனவுகள் கண்டவண்ணமிருந்தது. மழையால் நனைந்த கந்தையைப் பிழிந்து உடுத்தலாமென்றாவது, தான் செல்லும் வழி சரிதானா என்றாவது, அவள் குழந்தை உள்ளம் உணரவேயில்லை. கொடுங்குளிரினால் நடுங்கிக்கொண்டே அன்றொருநாள் நடந்த சம்பவத்தை நினைத்து அகமகிழ்வாள். உடனே துடிக்கின்ற





உள்ளத்துடன் தன்னுடைய நிலைமையை உன்னி கண்ணீர் சொரிவாள். ஆ! கடவுளே! என்னை அவர் அங்கீகரிப்பாரா? என்னதான் மனோதைரியம் உடையவராயினும், இதற்கு எப்படி நம் ஜாதியும், சமயமும் இடம் தரும்! இது அவர் அறியாததல்லவே! எனினும் அவர் கூறிய உறுதிமொழிகள் பொய்யாகிவிடுமா? அது ஒருபோதுமில்லை. எவ்விதமிருப்பினும் இன்று நான் அவரது தரிசனம் காண்பேன் என்று அடிக்கடி சிந்தித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் ஒன்றும் தோன்றாது மதிமயங்கி தமது காதலனின் ஒரே எண்ணத்துடன் கால் சென்றவழியே காந்திமதி சென்றனள். பெரும் இடியும் மழையும் ஓய்ந்து, மென்மேலும் இருள் கவிந்துவருவதை அவள் அறிந்தாளில்லை. தன் வறுமைநிறைந்த வாழ்க்கையையும், பரலோகம் சென்ற தன் தாய்தந்தையரையும் எண்ணும்போதே அவளது மனம் கலங்கிற்று. "இந்தத் தேகம் மண்ணாலாகியது; என் பெற்றோர்களும் மண்ணிலேயேமறைந்திருக்கின்றனர்! என்று தன்மனதைத் தேற்றிக் கொள்வாள். இவ்வளவுகாலமும் சகிக்கமுடியாத இன்னல்களை அனுபவித்து—இப்போது கவலையற்று அவர்கள் மண்ணின்கீழ்—உறங்குவது—காந்திமதியின் உள்ளத்திற்குச் சிறிது ஆறுதலளித்தது. அதனால் பலவித எண்ணங்களால் சிறிது அலைந்த பாவை காந்தியின் செவியில் ஒருவித இசையின்மாயை," ஐயோ! பைத்தியக்காரி! உலகம் நகைக்கும் கட்டுப்பாட்டால் கட்டுண்டு தவிக்கும் உன் காதலன், இனி உனை நினைந்து என் செய்வானோ! இதை நீ அறியாயா, என மெல்லிய ஓசையில் ஒலித்துக்கொண்டே இருந்தது! தன் அன்பனின் இனிய பிரேம லீலை விளையாடிக்கொண்டிருந்த காந்திமதியின் செவியில் இவைகளெல்லாம் கேட்கவே இல்லை. காதலனின் ஒரே எண்ணத்துடன் அவனை நாடிச் சென்றுகொண்டேதான் இருந்தாள். அந்தோ! பாவம்! உலகமறியாச் சிறுமியாகிய அவளது உள்ளத்திற்கு இந்த மர்மங்களெல்லாம் எப்படித் தெரியப்போகிறது?

காவிரி கடலோடு கலக்குமிடத்திற்குச் சிறிது தூரத்திலிருந்ததோர் சிறு கிராமத்தில் காந்திமதி, தன் பெற்றோர்களுடன் வாழ்ந்து வந்தாள். பாழும் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு ஊரிற்கு அப்பாலேயே அவளது குடிசை இருந்தது. காலை இளவெயில் எழுமுன்னேயே, தமது வயதுசென்ற

தந்தையை எழுப்பி கைத்தறிக்கருகில் அமரும்படிசெய்வாள். "அப்பா! நமது வயிற்றிற்குச் சிறிதாவது உணவளித்து வரும், கைத்தறியில் ஏதாவது ஒன்றை நெய்துகொடுங்கள்! "இதோ நான் ராட்டினத்தில் நூல் நூற்றுத் தயாராக வைத்திருக்கிறேன்! இன்றைய உணவிற்கு இதைவிட வேறு வழி ஏது?" என்று கண்களில் நீர்ததும்பக் கூறுவாள். உடனே டிக் டக் என்னும் மெல்லிய ஒலி, எலும்புக் கூடென விளங்கும் அப்பெரியாரிடமிருந்து கிளம்புவதைச் செவியுறும் ஒவ்வொருவருடைய உள்ளமும் அப்படியே 'திக் திக்' என்று அடித்துக்கொள்ளும். "இக்காலத்தில் யாரம்மா நம் துணியை வாங்குகிறார்கள்? இந்தக் கும்பியின் கொடும்பசியை அடக்கி நெய்த கதராடை என்று எவ்வளவோ நம் துயரத்தைச் சொல்லி அழுதாலும், ஒருவராவது செவிசாய்ப்பது கிடையாதே! நமது வயிற்றின் எரிவைத் தணிக்கவும் ஒருவரும் இரக்கம்கொள்வதில்லை. ஏனெனில் நாம் பறைச்சாதியைச் சேர்ந்தோர்களாதலால் நம் அருகில் வரவே ஜனங்கள் அஞ்சுகிறார்கள். இனி நாம் கையால் தொட்டு நெய்யும் துணியை யார் தீண்டுவார்கள்" என்ற அப்பெரியவரின் மெல்லிய மொழிகள் கைத்தறியின் டிக் டக் கென்னும் சப்தத்துடன் சேர்ந்து ஒலிக்கும். ஒருபக்கம் பஞ்சு கொட்டும் வில்லும்—நூல்கட்டு—பஞ்சுமூட்டைகளுக்கும் இடையில் மின்கொடியென காந்திமதி அமர்ந்து ராட்டினமொன்றில் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். அவளது தந்தையின் வருத்தம் நிறைந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில், துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு எழும்பிற்று. எனினும், தன் தந்தை கண்ணுறில், அவரது மனம் நோகுமென்று இயன்றவரை கண்ணீரை அடக்கிக்கொண்டாள். ஒருபுறம் தரையில் படுத்திருந்த அவளது தாய் இரண்டு நாள் பட்டினி என்பதை எண்ணும் தோறும், காந்திமதிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஆனால் அந்த ஜீவன் இப்போது இகலோகத்தில் இல்லை. தாய் களைப்பினால் அயர்ந்து உறங்குகிறாள் என்றே எண்ணி மென்மேலும் எழுந்த துக்கத்தால் கட்டுண்டவண்ணம், தந்தையால் நெய்யப்பட்ட துணிகளை எடுத்துக்கொண்டு வெளியில் புறப்படலானாள்." "அப்பா! இதை விற்றுவிட்டுக் காட்டில் சென்று விறகுச்சுள்ளிகள் பொறுக்கிக்கொண்டு, வெகு சீக்கிரத்திலேயே வந்துவிடுகிறேன்"



என்று, விழிகளில் நீர்பெருகக் காந்திமதி கூறினாள். 'அம்மா! நீ போகிறாயா? ஐயோ! என்னைத் தன்னந்தனியாக தவிக்க விட்டுவிட்டுப் போய்விடாதே!' என்று கிழவன் மெல்லிய குரலில் கூறிக்கொண்டே மூர்ச்சையாய்க் கீழே சாய்ந்தான். மனித சிருஷ்டிக்கு அந்தப்பாசம் எப்போதும் விடுவதில்லை அல்லவா? அப்போது காந்தி ஒன்றும் தோன்றாது பைத்தியம் பிடித்தவள்போல் தெருத்தெருவாகச் சென்றுகொண்டேயிருந்தாள். பதினெட்டு வயதுடைய அவளது அற்புத சௌந்தரியத்தையும், அழகின் குணத்தையும் கண்ணுற்ற ஜனங்கள்—ஆச்சரியத்தினால் திகைத்துப்போயினர். பறைப்பெண்ணிற்கு முகத்தில் இவ்வளவு தேஜஸ் ஏது? என்று ஒருவருக்கொருவர் வினவிக்கொண்டனர். தன்னுடைய துணிகளை ஒருவரும் பாராமலும்—பாவம்—அவளது கொடும்பசியைத் தணிப்பதற்குக்கூட ஒரு ஜீவனும் மனமிரங்காமற்போகவே, காட்டிற்கு விறகாவது பொறுக்கச் செல்லலாமெனக் காந்திமதி துணிந்தாள். அந்த அரண்யமே நம் உள்ளத்திற்குச் சாந்தி தரும் இடம் என தனக்குள் சொல்லிக்கொண்டாள். உடனே காட்டைநோக்கிப்புறப்பட்டாள். அப்போது சாயங்காலம் ஐந்து மணியிருக்கும். பக்ஷிகளெல்லாம் இன்னிசையுடன் பாடிக்கொண்டே தமது குஞ்சுகளைநாடி ஆவலுடன் பறந்து சென்றுகொண்டிருந்தன. அன்றைய மாலைப்பொழுது மிகவும் மனோரம்மியமாக இருந்தது. அவ்வரண்யத்தில இருந்த மலர்கள் மணம் வீசியும், அவைகளின் மதுவை உண்ட வண்டுகளின் ரீங்காரமும் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. இதென்ன! சுள்ளிகள் சேகரித்துக்கொண்டிருந்த காந்திமதியின் உள்ளத்திற்கு ஏதோ ஒருவித இசையின் மாயை என்னவோ வந்து சொல்லிற்று. அவ்வளவுதான்! அகத்திலிருந்த துயரங்களெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தன! காந்தி திடுக்கிட்டாள். இதன் காரணம் தோன்றாது திகைத்தாள். தன்னுடைய துயரங்களையெல்லாம் உருவாக்கி இன்னிசையுடன்பாடலானாள். அந்த ஓசையின்மாயை அங்கே உலாவிக்கொண்டிருந்த மதுரத்தின் உள்ளத்தை தூண்டிவிட்டது. "அதோபார்!; உமக்கு அருகில் அளவிலடங்கா இன்பம் காத்துக்கொண்டிருக்கிறது! அதை இப்போது கவனிக்காமல் இருக்கிறாயே" என்று அத்ரிச்யரூபம் அவனுக்குக் காதோடுகாதாய்ச் சொல்லிற்று. உடனே இன்

னிசைவந்த திசைநோக்கி மதுரம் சென்றான். அங்கு அருகிலேயே காந்தியைக்கண்டதும், அவனுடைய கண்ணும் கருத்தும்ஒருங்கே பிரமித்து நின்றன. பெண்ணே! நீ யார்! என்று அன்புகலந்த குரலில் அவளை அறியாமலேயே வினவினான். திடீரென்று மனிதர்குரலின் அரவத்தைக் கேட்டமாத்திரத்தில், காந்திமதி தன் கனவுலோகத்திலிருந்து விழித்தெழுந்தாள் மதுரத்தைக் கண்டவுடன் திடுக்கிட்டு அப்பால் செல்ல ஆரம்பித்தாள். “வனதேவதையே நில்! நீ யாரென்பதைச் சொல்! என்று கூறிக்கொண்டே அவளை இடைமறித்து நின்றான். இப்படி நீ என்னைத் தன்னந்தனியே தவிக்கவிட்டு விட்டுச் செல்லலாமா என்றான். காந்திமதி தமது மருண்ட விழிகளை மருட்டிக்கொண்டே, “ஸ்வாமி! இதென்ன! என்னை நெருங்காதீர்கள்! ஐயோ சிறிதுநேரம் என்னுடன் வார்த்தையாடினும், நீங்கள் ஜாதிப்பிரஷ்டராகி விடுவீர்களே! இதோ அருகிலிருக்கும் என்னுடைய கிராமத்திற்கு நான் செல்லவேண்டும். அங்கே என் பெற்றோர்கள் பட்டினியால் தவித்துக்கொண்டிருப்பார்கள் என்று மெல்லிய குரலில் சொல்லிக்கொண்டே விலகிச் செல்லலானாள். மதுரம் அவளைத்தொடர்ந்துசென்று” என்கண்ணே! நான் உன் அழகில் ஈடுபட்டுவிட்டேன்! என்னை மணம்புரிந்து என் உயிரைக் காப்பாற்றமாட்டாயா? என்றான். காந்திமதி கண்களில் நீர் பெருகியோட “அந்தோ! என்ன சொன்னீர்கள்! நான் சண்டாள குலத்திற் பிறந்ததோர் அனாதைச் சிறுமி. என்னை நீங்கள் தீண்டினீர்கள் என்ற செய்தி அறியினும், தங்களையும் ஒருவரும் தீண்டார்கள்! இதோ என் சேரிக்கு நான் செல்லுகிறேன்.” விடை தாருங்கள்! என்றாள். மதுரம் நகைத்தவண்ணம் “கண்ணே! நம் காதற்கு ஜாதியைப் பொருட்படுத்திப் பேசாதே! நீ எந்த இழிகுலத்தோளாயினும்சரியே! உனக்காகவேண்டிக் குலத்தைமட்டுமல்ல! என் உயிரையும் இழக்க இதோ தயாராய் இருக்கிறேன்; என்று கூறிக்கொண்டே அவளது மலர்க்கரத்தைப் பற்றினான்”. அந்த இன்ப உணர்ச்சியால் கட்டுண்ட காந்தியும் மதிமயங்கினாள். அவளும், அவளது பெற்றோர்களும் அனுபவிக்கும் துன்பத்தையும் மறந்தாள். இருவரும் கைகோர்த்தவண்ணம் கிராமத்தை நோக்கிச் செல்லலானார்கள். அந்தோ! இந்த அழகிய காக்ஷியைக் கண்டுகளிக்க, காந்தியைப்பெற்ற மனம்



189934

இப்போது எங்கே! அது நிம்மதியுடன் ஈசன் நாமங்களைத் துதிக்க அங்கு சென்றவர்களுக்கு; இவ்வாசையின் உலக பாசம் எங்கிருந்துவரும்? கிராமத்தின் அருகில் வந்ததும் காந்திமதியும் மதுரமும் தங்கள் சுய உண[illegible]றார்கள். “கண்ணே! என்ஊர் அவ்வரண்யத்திற்கு அப்புறத்திலல்லவோ இருக்கிறது? நான் என்னை மறந்து உன்னுடனேயே வந்துவிட்டேன்! இப்போது உன்னைப்பிரிந்து என்னுடைய இல்லம் செல்லவே என் மனம் மிகவும் வருந்துகிறது! இருப்பினும் நாளை நாம் சந்திப்போம், எனக்கு விடைகொடு என்று மதுரம் வேண்டி நின்றான்.” நீங்கள் சொல்லுவதற்கு நான் எதிர் சொல்லுவேனா! அது ஒருக்காலுமில்லை! என்று காந்தியும் நாக்குழறக் கூறினாள். மதுரம் மனமின்றிப் பிரிந்து சென்றதும், சேரியிலுள்ள தன் குடிலுக்கு காந்திமதி விரைந்து ஓடினாள். அங்கு அவள் கண்ட காட்சி யென்ன? அது கல்லையும் கரைக்கக் கூடியது! அவளுடைய பெற்றோர்கள் இப்பொழுது இஹலோகத்தில் இல்லை. தன்னந்தனியாக அலறிக்கொண்டு, பைத்தியம் பிடித்தவள்போல் மின்னற் கொடியென, தமது காதலன் ஊர்நோக்கி ஓடினாள். அப்படி ஓடும்போதுதான், ஆரம்பத்திற்கூறியபடி அவள் அறிவை இழந்து—அனுதினமும் செய்வழக்கம்போல்-கண்ணில் தோன்றிய சுள்ளிகளைப்பொறுக்குவதும்—மலர்களைப் பறிப்பதுமாக தன்னைமறந்து மழையிலும் இடியிலும் காந்திமதி சென்றுகொண்டிருந்தாள்.

நல்ல நிலா, எங்கும் ஒரே வெண்மையான மணல் திரள். வெள்ளிய நிலாவின் அமிர்தம் கடலிற் பாய்ந்து கண்ணையும் கருத்தையும் இன்புறச் செய்கின்றன. காந்தியும் மதுரமும் கைகோர்த்தவண்ணம் எங்கேயோ, மெதுவாக நடந்து சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் கடலைநோக்கிச் சென்றுகொண்டிருந்ததை காந்தியின் குழந்தை உள்ளம் உணரவில்லை. மதுரம் மனமுடைந்துபோனதற்குக் காரணம், நாம் சொல்லாமலே உங்களுக்கு விளங்கியிருக்கும். காந்தி இன்பத்தின் சிகரத்திலிருந்துகொண்டே, தமது காதலனுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசியவண்ணம் செல்லலானாள். “நாதா! இந்த நிலவின் ஒளியில் எங்கேதான் என்னை மௌனமாக அழைத்துக்கொண்டு செல்கிறீர்கள்! ஐயோ! என்னுடைய உடல்முழுவதும் தீயிற் கருகுவதுபோன்ற உணர்ச்சி

ஏற்படுகிறதே! உஸ்—இனி என்னால் நடக்கமுடியாது. எவ்வளவோ துன்பங்களையெல்லாம் அனுபவித்த என்னை—இந்த நிலவின்—பிரகாசம் தகிக்கிறதே!.........கால்கள் தள்ளாடுகிறது!..........வாய் திறந்துதான் ஒரு வார்த்தை பேசுங்களேன்!..........என்மீது என்னதான் கோபம் இருந்தாலும் எங்கே இப்போது சென்றாலும்—என்னைமாத்திரம் நீங்கள் பிரிந்து போய்விடமுடியாது! தாங்கள் எங்கு ஏகினும், நானும் பின்தொடர்வேன் என்பது நிச்சயம்..........உம்......ஆமாம்! என்று மதுரத்தின் கழுத்தைக் கட்டிக்கொண்டே காந்திமதி அன்புடன் கூறினாள்''. மதுரம் மதிமயங்கி கண்களில் நீர்பெருக "சந்திரனின் ஒளியால் உடல்வருந்தும் என் காதற்கிளியே! அதோ தெரிகிறதே! கருங்கடல்! அது தான் இப்போது நாம்செல்லும் இடம்! இங்கிருந்து ஒருமைல் தூரம்சென்றிடில் அதை நாம் அடைவோம்! இனிமையையும் இன்பத்தையும் அக்கடல் நமக்கு அளிக்கும்! அங்கே ஜாதியின் நீதிகள் பேசுவோர் கிடையாது! மதத்தின் அர்த்தமற்ற பிரிவினைகளும் கிடையாது. உண்மைக் காதலர்களாதலால், நாம் சாந்தியடைய அக்கடலடியே நமக்கு வழியாகும்.........உடனே பேரலைகள் அவர்களை ஏற்று அணைத்துக்கொண்டன! அன்று மதுரம் கூறிய வார்த்தைகளை ஓர் எளிய கவியால் புனைந்து காட்டலிர்மா?

திங்கள்காய் வெயிலினால் அங்கம் நோய் அடையுமென்
சிறுநுதற் சேயிழாய்! இருவர்சேர் இடமதற்
இங்கிருந் தொருமயில் ஏகிடில் அடைகுவோம்!
இனிமையும் புதுமையும் கனிவுடன் தருகடல்!
சங்கையின் மங்கையே! சாதியின் நீதியும்
அங்குநம் மதமுமில் லாத அக் கடலடிக்
கங்குலிற் றங்குவம்! காதலர் ஆதலால்
காந்தியும் மதுரமும் சாந்தியின் மதுரமே!

# கல்வி இன்பம்.

( A. G. கோமதிநாதன் அம்மாள், )
அகில இந்திய பெண்கள் கல்விச்சங்க ஸ்டாண்டிங் கமிட்டி மெம்பர்.

கல்வியாவது ஈண்டு வித்தை என்னும் பொருள் தந்து நிற்பதாம். ஒரு பொருளை அறியுங்கால் பிண்டமாக அறியும் நிர்விகற்ப உணர்ச்சி போலாது அறியும் சவிகற்ப உணர்ச்சியைத் தருதற்குக் கருவியாவது இக்கல்வியேயாம். இக்கல்வி இல்லாதார் சவிகற்ப உணர்ச்சியைக்கூடப் பெறார். விலங்கினங்களோடொப்ப அறியும் பஞ்சேந்திரிய உணர்ச்சியின் வேறாய், மனிதற்கே உரியதாய், மனத்தின் கண் நிகழும் பெற்றித்தாய், நல்லதன் நலமும், தீயதன் தீமையும் பகுத்தறிந்து கோடற்குக் கருவியாயுறுவதும் இக்கல்வியேயாம்.

கல்விச் சிறப்பு:— கல்வியே மனத்தைத் தீய வழியிற் புகவிடாது நல் வழியிற்செலுத்தி மாட்சிபெறச்செய்வது. மனிதரிடத்துள்ள மிருகத்தன்மையை மாற்றி, அவர்களுக்கு மனிதத்தன்மையைக்கொடுக்கவல்லது. மேலும் கல்வி கள்வரால்கவரப்படாதது; தாயத்தாரால் பாகிக்கப்படாதது; அரசரால் கொள்ளப்படாதது; வெள்ளத்தால் அழிக்கப்படாதது; பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க குறைவெய்தாது நிறைவுறுவது; அறிவை விருத்திசெய்வதும், வளர்ப்பதுமாகிய இவை போன்ற பல்வகைச் சிறப்புக்களை உண்டாக்குவதும் இக்கல்வியேதான்.

கற்றார் சிறப்பு:— உலகத்தார் அரசனைத் தெய்வமாக மதிப்பர். அரசனைவிட அநேக மடங்கு கற்றாரே சிறப்பெய்துவர். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. கற்றோரே யாவராலும் புகழ்தற்குரியர். இவைகளை பண்டைப் புலவர் சரிதவாயிலாக யாவரும் நன்கறிந்தவிஷயமே. சோழ மன்னனால் சிறிது புறக்கணிக்கப்பட்டு, சீர்நாட்டை நீங்கி

மலைநாட்டை எய்திய கம்பநாட்டாழ்வார் அம்மலைநாட்டு மன்னர்பெருமானால் மிகப்பாராட்டப்பட்டு மீண்ட சரிதமொன்றே இதற்குப் போதிய சான்றாகும்.

ஆதலின், கற்கப்புகுவோர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களைப் போதிப்பனவாகிய நூல்களையே கற்கக்கடவர். அன்றியும், அரச நீதி, முன்னோர் வரலாறு முதலியனவைகளை உணர்த்தும் நூல்களையும், நல்லறிவைப்பெருக்கும் ஏனைய நூல்களையும் கற்கவேண்டும். இங்ஙனமன்றி அனுவசியமாக இதர நூல்களைக் கற்றால் கல்வி இன்பம் அறிய இயலாமல்போய்விடுகிறது.

இக்காலத்தில் சிறுவர்களுக்கு பள்ளியில் எளிதான முறையில் கல்வி போதிக்கப்படுகிறது. அது போதாது. தொழிற்கல்வியும் கற்பிக்கப்படவேண்டும். "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்ற வண்ணம் நம் முன்னோர் ஏற்படுத்திய நீதி நூற்களைப் போதிக்கவேண்டும், இளமைப் பருவத்தில் கற்றறிந்த நீதிகள் சிறுவர்களது உள்ளத்தே ஊன்றிப் பதிவனவாகும். பின் வயது சென்றபின்னும் இளமையிற் கற்ற இந் நூல்களின் சாரம் அவர்கள் உள்ளத்தில் படிந்து பன்னலம்புரிவனவாகும். ஆதலால் ஆசிரியர்கள் சிறுவர்களுக்குப் பருவத்திற்கேற்ற சிறு நீதி நூல்களின் பொருளமைப்பை விரித்துப் போதிக்கவேண்டும். முதன் முதலில் தாய்மொழியைக் கற்பிக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கே உரியது. இவைகளைக் கவனித்துத்தான் நல்லாசிரியரையடுத்து குழந்தைகள் கல்வி கற்கவேண்டுமென்று கருதியே ஆசிரியர் இலக்கணத்தை நன்கு விரித்தோதி வைத்துள்ளார் நம்முதியோர்கள். பலர் இதனைக்கவனிப்பதில்லை. முன்னர்கவனியாது மக்கள் கல்வியின்பொருட்டு பொருட்செலவிட அஞ்சி உபயோகமற்ற பள்ளிகளில் தம்மக்களைக் கல்விபயில விட்டுபின்னர் தம்மக்களின் கல்வியும் சிறப்படையாமல், மனநிலை மாறுபட்டு, ஒழுக்கம் குன்றிப்போதலைக்கண்டு கண்ணீர்விட்டு மனம் வருந்துவதில் என்ன பலன்? இப்படி மதி இழந்து, மக்களைக் கெடுத்துப் பரிதபிக்கும் பேர் அனேகர் உளர். அந்தோ பரிதாபம்.

கல்வியைக் கற்கும்போது துன்பமாகத் தோன்றினும் 'தொடங்குங்கால் துன்பமாயின்பம் பயக்கும்" என்றவாறு



பிற்பயப்பதான இன்பத்தைக் கருதி வருத்தமுற்றாலும் சலியாது ஊக்கத்துடன் கற்கவேண்டும். சிறுவர்கள் காலந்தவறாது கலாசாலைக்குச் சென்று, உபாத்தியாயரை வழிபாடு செய்து, அவரை மகிழ்ச்சியுறச் செய்து, அவர் கற்பிக்கும் கல்வியைப் பசித்துண்பவன் போல ஆவலுடன் கற்கவேண்டும். தாம் கற்ற பாடங்களை தம்மிற்றாழ்ந்தவர்களுக்குப் போதிக்கவேண்டும். இவையெல்லாம் தாம் கற்ற கல்வியை நிலைநாட்டற்குரியன.

இதைப்பற்றியொரு சிறு கதை இங்கு கூறுவோம். காரிகை நூலை புக்க மாணாக்கனொருவன் மிக்க கவனத்துடன் கற்றுவந்தான். ஒரு நாள் அவனுண்ணும்போது அவனது தாய் நெய்க்குப்பதிலாக வேப்பெண்ணெயை வார்த்தனள். அம்மாணவனது கவனம் படிப்பிலேயே சென்றிருந்ததால் கசப்பறியாது உணவருந்தினான். தன் தவறையறிந்த தாய் தன் மகன் கல்வியிலேயே அதிகக்கவனம் செலுத்துவதைக் கண்டு மிக்க சந்தோஷித்தனள். பிரதிதினமும் அவனது சாப்பாட்டிற்கு வேப்பெண்ணெயே ஊற்றிவந்தனள்; அவனும் உண்டுவந்தான்; மாணவனும் நன்கு கற்று பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினான். பின் மறுநாள் சாப்பிடும்போது நெய் கசக்கிறதென்று மகன் தாயிடம் கூறினான். தாய் "அப்பா! இன்றுதான் உணவின் ருசி உனக்குத்தெரிந்தது; நீ கற்ற கல்வியினால் இன்பம் அடைவாய்; உன் கல்வியின் கவனத்தைக் கண்டறியவே தினந்தோறும் நீ உணவருந்தும்போது நெய்க்குப் பதிலாக வேப்பெண்ணெய் வார்த்துவந்தேன்" எனக்கூறி இருவரும் மகிழ்ந்தனர்.

**கல்வி கல்லாமையில் இழிவு:—**

"கல்லாத மூடரைக்காணவு மாகாது .... ..."

என்றபடி கல்லாதவர் உருவம் மரம் போலவும், முகம் சுடுகாட்டைப்போலவும், கண்கள் முகத்திலிரண்டு புண் போலவும், கற்றாரை சென்று பேசுதல் நாய் குறைப்பது போலவும், உடல் பாழேயாகுமென்றும் கூறுகின்றனர்.

**கற்றவர்பால் இறைவனருள்:—** எங்கும் நிறைந்து நிற்கும் இறைவனைப் பற்றியறிய வேண்டின் கலை ஞானம் இன்றியமையாதென்பது கூறாமலேயே விளங்கும். "உவமையிலாக் கலைஞானம்" எனச்சிறப்பித்தோதும் ஸ்ரீ

சேக்கிழார் பெருமான் திருவாக்கும் ஈண்டு சிந்திக்கற்பாலதாம். கற்றவர் பக்கல் இறைவனருட்பெருக்கம் தெற்றென விளங்குதலைப்பற்றி நம் பெரியார் கூறியுள்ள அருமைத் திருவாக்குகளால் காண்க.

**கல்வியாற் பெறும் இன்பம்:—** உலகிற்றோன்றிய ஆன்மாக்களெல்லாம் இன்பத்தை விரும்பும். துக்க நிவர்த்தியையும், இன்பப் பேற்றையும் விரும்பாத உயிர்கள் கிடையா. ஆகாரம், நித்திரையாதியவற்றால் உண்டாகும் இன்பம் எல்லாவுயிர்கட்குமுண்டு. அவ்வின்பம் நிலையற்றதாம். ஆதலின் சிற்றின்பமெனப்படும். இம்மையிலும் மறுமையிலும் இன்பமே தந்து, ஆன்றோரால் புகழப்படும் இன்பமே கல்வி இன்பம் எனப்படுவது.

சிற்றின்பம் ஞானத்தைக் கெடுக்கும்; கல்வி இன்பம் ஞானத்தைக் கொடுக்கும். சிற்றின்பம் கவலையை ஆக்கும்; கல்வியின்பம் கவலையை நீக்கும். சிற்றின்பம் அறம், பொருள், வீடு பேற்றுக்குத் தடையாம். கல்வி இன்பம் அவைகளை அடைதற்குத் துணையாம். சிற்றின்பம் அடைந்தோர் பிறரும் அவ்வாறே அடையச் சகியார். கல்வி இன்பமடைந்தோர் தம்மைப்போன்று உலகமெலாமெய்த விரும்புவர். இம்மையிற் பெரும் இன்பமுறச் செய்யவல்லது கல்வியேயாம். இது பற்றியே கல்வியைக் கற்புடைப் பெண்டிராகவும், கவி பாடுதலை மக்கட்பேறாகவும் பிறவும் ஏற்றவாறு புனைந்து கூறியிருக்கின்றனர் போலும்.

"கல்வியே கற்புடைப் பெண்டிர் - அப்பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனேயாங் கவியாச்
சொல் வளமல்லல் வெறுக்கையா - மாணவை
மண்ணுறத்துஞ் செல்வமு முண்டு சிலர்க்கு"

என்பது அது.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

# மாதர் பகுதி.

## பெண்கள் நிலைமை.

தோழர், A.B. ஆதித்தர்.

தமிழ் நாட்டில் பெண்களுக்கிருந்த சுதந்திரம் வேறு எந்த நாட்டிலும் இருந்ததில்லை. இங்கு இருபாலரும் சகலவுரிமைகளும் பெற்று சமமாக வாழ்ந்தார்கள். ஆண்களைப்போலவே பெண்களும் அரசியற்றி இருக்கிறார்கள். போரில் நின்று வெற்றிபெற்றிருக்கிறார்கள். பல பெண்கள் வித்வ சிரோன்மணிகளாயிருந்திருக்கிறார்கள். இருபாலரும் மனமொத்த காதல் மணம் நடத்தி மகிழ்வுடன் வாழ்ந்திருக்கிறார்கள். ஆண்களுக்கொரு சட்டம் என்பது இங்கில்லை. சுருங்கக்கூறின் ஆதியில் பெண்மக்களுக்கு மதிப்புக்கொடுத்தது தமிழ் மாகாணம் ஒன்றுதான்.

அத்தகைய உன்னத தெய்வீகவாழ்வு நடாத்திய தமிழ் நாட்டில் என்று ஆரியமத சம்பிரதாயங்கள் புகுந்து வேலை செய்ததோ அன்றுமுதல் பெண்கள் தாழ்வானவர்களாக அடிமைப் படுத்தப்பட்டார்கள். பிறந்தமாத்திரத்திலேயே பெண் என்றவுடன் பெற்றோருக்கும், உற்றோருக்கும் சந்தோஷம் கிடையாது. பெண்கள் படிக்கக்கூடாது. அவள் பாலிகையாக—பச்சைக் குழந்தையாக விபரம் தெரியாமலிருக்கும்பொழுதே எவனையாவதுகொண்டு அவள் கழுத்தில் தாலியைக் கட்டச்சொல்லி அவளுக்குக் கல்யாணமாகிவிட்டதென்று தீர்மானித்துக்கொள்வார்கள். பருவமடைந்ததும் அவள் பணக்காரக் குடும்பத்திலுள்ளவளானால் படுதா முறையநுஷ்டிக்கவேண்டும். வயது எத்தனையாகிய போதிலும் ஒரு கணவனைத் தெரிந்தெடுக்க அவளுக்கு உரிமை இல்லை. அவளுக்குச் சம்மதம் இல்லாது போயினும் அவளின் இனத்தவர் குறிப்பிடும் புருஷனுக்கு அவள் மனைவியாகவேண்டும். புருஷன் சொற்படியே அவள் நடக்க

வேண்டும். அவளுக்கு சுயபுத்தி கிடையாது. அவள் சொற்கேட்டு புருஷன் நடக்கவேண்டியதில்லை. அவன் என்னதான் சொன்னாலும் மறுவார்த்தை சொல்லாமல் சொன்னபடி எல்லாம் நடக்கவேண்டும். இருப்பு—அந்தஸ்து, சொத்து உரிமை ஒன்றும் அவளுக்குக் கிடையாது. பசித்தால் புசிக்கக்கூடாது. கணவன் உண்டபிறகு, அதுவும் அவன் வைத்த எச்சில்(மீதி) அவள் கட்டாயம் உண்ணவேண்டும். அவன் எஜமான். அவள் அடிமை. அவனையே தெய்வமாகக் கருதி அவள் நடக்கவேண்டும். மறுபுருஷனைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாது. அதுதான் கற்பு! அவனோ அவள் இருக்கும்பொழுதே பல மனைவிகளையும், வைப்பாட்டிகளையும் வைத்துக்கொள்ளலாம், அவளை விலக்கியும் விடலாம். அவளால் அப்படிச் செய்ய முடியாது.

(முன்பு) புருஷன் இறந்துபோனால் அவள் தீப்பாயவேண்டும். அல்லது (தற்காலம்) ஆபரணங்களோ, பூக்களோ, ஆடைகளோ அணியக்கூடாது. சுப காரியங்களில் கலந்துகொள்ளக்கூடாது. எண்ணெய் தேய்க்கக்கூடாது. அழகபாரம் அவிழ்க்கப்படவேண்டும்; அல்லது சிரைக்கப்படவேண்டும். நன்றாக உண்ணக்கூடாது. தனிமையிலிருந்து அவனுக்காக நோன்பு அநுஷ்டிக்கவேண்டும். அவள் இறந்துபோனால் அவனுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை.

இவ்விதமாகப் பெண்கள் ஒரு உயிருள்ள சாமானைப்போல், வீடுகளைச் சுத்தம் செய்துகொண்டுகிடக்கவேண்டிய வேலைக்காரிகள்போல், மிகவும் இழிந்த மீளா அடிமைகள்போல், சந்தையில் வாங்கிய மாடுபோல், சமையல் செய்யும் (குக்கர்) இயந்திரம்போல், புருஷர்களுக்கு வேலைசெய்யவும், கேவலம் அவர்களின் காம இச்சையைத் தீர்த்துக்கொள்ளவும் ஏற்பட்ட ஒரு கருவிபோல், பிள்ளைபெறுகிற நகரும் இயந்திரம்போல் கருதப்படுகிறார்கள்.

மனைவிமார்கள் புருஷர்களால் இவ்வளவு இழிவாகக் கருதப்படுவதோடு அடிக்கடி வையவும், அடிக்கவும்படுகிறார்கள். டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் கூறியபிரகாரம் பெண்கள் நிரட்சர குட்சிகளாகவும், அடிமைகளாகவும், பொம்மைகளாகவும், ஆடை ஆபரணங்களணிந்த காமக் கருவிகளாகவும் இருக்கிறார்கள்.



ஆரியர்களது சம்பந்தத்தாலே நமது வீரத் தாய்மார்கள் இவ்வாறு இழிவு படுத்தப்பட்டதால் உலக காரியங்களில் கலந்துகொள்ளாமல் வீண் வம்புப் பேச்சுப்பேசிக் காலங் கழிக்கலானார்கள். அவ்வாறு இருப்பதே தங்கள் கடமை என்றும் எண்ணிக்கொண்டனர்.

ஆங்கிலேயர் அரசாட்சி வந்தது. காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றுவிட்டது. தமிழகம் தனது பண்டைய நிலைமையை அடைந்துகொண்டுவருகிறது. கல்வியிலும் சம உரிமை கொடுக்கப்பட்டாய்விட்டது. இன்னமும் சொத்து சுகபோகங்களிலும் சமவுரிமை வழங்குவதற்கு முயற்சி நடந்து வருகிறது. எதிர்காலத்தில் நமது மக்கள் இருபாலரும் மயிலும் மானும்போல் இன்புற்று உல்லாசமாக வாழ்வரென்பதிலையமில்லை.


ஆண் பெண் சமத்துவம் என்னும் விஷயமாய் காலச்சக்கரவேகத்திலே வள்ளுவர், மில்டன் முதலிய பல பெரியார்கள்மீதும் குற்றம் சுமத்தப்படுகிறது. இயற்கையிலேயே பெண்ணுக்கும் ஆணுக்கும் உருவத்திலேயே வித்தியாசமிருக்கிறது. ஆண் பலவான்; பெண் பலமிலாள். ஆண்கள் வலுத்தவர்கள்; பெண்கள் இளைத்தவர்கள். ஆண் கரடுமுரடானவன்; பெண் மிருதுவானவள். ஆண் வன்மைமிகுந்தவன்; பெண் மென்மைகொண்டவள். ஆண் மரம் போன்றவன்; பெண் கொடிபோன்றவள்.

இவ்வாறு வலிமைபெற்ற ஆணின் சரிநிகர் உரிமையை மெலிமையுள்ள பெண்ணானவள் எங்ஙனம் பெறுதல்கூடும்? ஒரேவார்த்தையில் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் ஆண் ஆண்மைகொண்டவன்; பெண் பெண்மைகொண்டவள். இது இயற்கையின் சட்டமாகும்.

இதனால் ஆண்கள் உயர்ந்தவர்கள்; பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று நான் கூறவரவில்லை. ஒல்வொருவரிடத்தில் ஒவ்வொரு தனித்த குணம் இருக்கிறது. பனைமரத்தில் ஆண் மரமும் உண்டு, பெண் மரமுமுண்டு. ஒன்றைவிட ஒன்று மேலானதா? இல்லை. ஒருகால் பெண்பனையையே மேலாகவும் சொல்லக்கூடும். இரண்டும் ஒரே வர்க்கமாகும். அதில் மேல், கீழ் எங்கிருந்து வந்துவிடும்? அதுபோல மனிதவர்க்கத்திலும் மேல், கீழ் என்பதில்லை. ஆண் பெண்

இருபாலரும் சமத்துவமாக இருந்து அவரவர் வேலையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். லாலாஜி கூறியபிரகாரம் ஆண்மக்கள் வேலை வேறு; பெண்மக்கள் வேலை வேறு. ஒருவரைவிட ஒருவர் உயர்வில்லை. இருவரும் சமமே என்று நான் கூறுகிறேன். டாக்டர் அனிபெசண்டு அம்மையாரும் "ஆணும் பெண்ணும் சமமேயாயினும் இருவருடைய அம்சங்களும் வெவ்வேறாகும்; இருவரும்சேர்ந்துதான் ஒன்றாகிறோம்" என்று கூறியுள்ளார். பூங்கொடிகளாகிய பெண்கள் நன்றாக வளர்ந்து புருஷர்களாகிய விருக்ஷங்களில் பின்னிப் படர்வார்களானால் அவ்விருக்ஷங்கள் அசையாமல்—ஊறுபடாமல் செழித்துப் பலம்பொருந்தி விருத்தியடையும். காக்கையின் இரண்டு கண்களுக்கும் ஒரே கண்மணி அமைந்தார் போல் ஆடவர், மகளீர் என்னும் இரண்டு உருவத்திலும ஒரே உயிர் அமைந்து வாழ்வு நடத்துகிறது. ஆணில்லாத பெண்ணும், பெண்ணில்லாத ஆணும் பாதி உருவாகவே இருக்கின்றது. இரண்டும் சேர்ந்த ஒன்றே முழுமனிதத் தன்மை பெறுகின்றது. ஆணின்றிப் பெண்ணில்லை; பெண்ணின்றி ஆணில்லை. ஆணும் பெண்ணும் சமமே.


நீங்கள் இதைப்படித்ததுண்டா?



மனச்சாந்தியும், அன்பும், ஒழுக்கமும் அடைய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய புஸ்தகம்

மார்க்க அரேலியர்

ஆத்ம சிந்தனை

பிரதி 1-க்கு விலை அணா 8

கிடைக்குமிடம்:—

மானேஜர், "சித்தன்" பழனி. S. I.




சதி மாதுரியில் ஓர் காக்ஷி.

# மாதர் மருத்துவம்

## சிசு வளர்ப்பு. 1.

189934

(திருவண்ணாமலை வைத்திய வேங்கடாசல முதலியார்.)

தமிழ் நாட்டுக் குடும்பங்களிலுள்ள சிசுக்களில் பெரும்பாலர், பலவிதப் பிணிகளால் பீடிக்கப்பெற்று வருந்துங்கால், அக்குடும்பங்களில் காணும் பல்வேறுவித மருத்துவங்கள், மருந்துகள், பூசைகள், கழிப்புகள், சாந்திகள், தீபம் ஏற்றிப்பார்த்தல், மை போட்டுப் பார்த்தல், குறி கேட்டல், சந்து பொங்கல் இடுதல், குளிசங்கட்டல், முடி கயிறு போடுதல், உயிருக்குப் பதில் உயிர் பலி தருவதாக கோழி, ஆடு பிரார்த்தித்து விடுதல், மனிதர் மீது (அதிலும் முக்கியமாக பெண்பாலர்மீது) சுவாமி ஆவேசம் வந்து உத்திரவு சொல்லுதல் முதலிய பல்வேறுவித மந்திரங்கள், தந்திரங்கள், சிகிச்சைகள், உபாயங்கள் நடைபெறுதலைக் காணாதார் இலர். இவ்விதமாகப் பலவகைப் பிணிகள் குற்றமற்ற சிசுக்களுக்குக் காணக் காரணம் அச்சிசுக்களே தேடிக்கொள்ளுகின்றனவா? இல்லை. பெற்றோர்களாலேயே உண்டாகின்றன எனல் மருத்துவ நூற்கொள்கை.

### செய்யுள்.

"சொல்லுகின்ற குழவிக்குக் கரப்பானேது?
தோஷமென்ற வினையேது? மாந்த மேது?
கொல்லுகின்ற கணமேது? அக்கரங்க ளேது?
கூறும் வைசூரியென்ற குறையுமேது?
புல்லுகின்ற தாயாலே தந்தையாலே
புனைந்து கொடிபடர்ந்ததுபோல் படர்ந்த திப்பால்
கொல்லுகின்ற கரப்பானும் கெர்ப்ப ரோகம்
கோதற்ற தோஷமெல்லாம் முலைப்பால் சூடே".

"கூடான மாந்தமெல்லாம் தாய்ப்பால் மாந்தம்
தொகையான கணங்களெல்லாம் கெர்ப்பச் சூடு
பீடான அக்கரங்கள் எல்லாந் தாயும்
பிதாயிருவர் புணர்ச்சியினால் எழுந்த சூடு
பாடான வைசூரி யெல்லாம் அநுபோகத்தால்
படர்ந்த திந்த வினையெல்லாம்",

குழந்தைகளுக்குக் காண்கின்ற கரப்பான்கள், தோஷங்கள், கணங்கள், அக்கரங்கள், வைசூரிகள் (அம்மைகள்) முதலிய பலவகைப் பிணிகளும் (புல்லுகின்ற தாயாலே, தந்தையாலே புணர்ந்து கொடி படர்ந்ததுபோல் படர்ந்தது) என்றும், (தாய், பிதா இருவர் புணர்ச்சியினால் எழுந்த சூடு) என்றும் மேல் செய்யுட்களில் கூறியிருத்தலே போதிய சான்றுகளாம்.

தமிழ்நாட்டுப் பாட்டியாராகிய ஔவைப்பிராட்டியாரும் தாமியற்றிய வைத்தியக் கும்மியிலும் இதையே வற்புறுத்துகின்றார்.

"கொங்கைப் பாலருந்துஞ் சிசுக்கள்தா மூங்கில்
குருத்துகள் போல செழித்திடவே—நீங்கள்
நங்கைமுறை நீங்கித் தங்கை மாராகவே
நாலாறு மாத மிருங்களடி".

நாலாறு மாதம் (இருபத்து நான்கு மாதங்கள்) வரையில் சிசுக்களுக்குப் பாலூட்டுந் தாய்மார்கள் (நங்கை — மனைவி) என்ற முறையை விடுத்து (தங்கை - சகோதரி) என்ற முறையில் நடந்துகொள்ளின், அவ்விதத் தாய்மார்களின் குற்றமற்ற கங்கைக் கொப்பான பாலைச் சுவைக்கும் சிசுக்கள் நல்ல ஆரோக்கிய வாழ்வில் வளரும் என்றும்,

"பால் மறக்கு மட்டும் பாவையரே நீங்கள்
பாய் படுக்கைத் தனித்தே யிருக்கில்—உங்கள்
சேல் விழிக் குழவிக் கெவ்வித பிணிகளும்
சேரா வென்றே யடியுங்கடி".

சிசுக்கள் தாமாகவே தாய்ப்பாலை மறக்கும் வரையில் தாய்மார்கள் தனிப்படுக்கையாக இருக்கின் எவ்விதப்பிணிகளும் சிசுக்களுக்குச் சேரா என்றும் வற்புறுத்துகின்றார். இதனைத் தற்காலத் தமிழ்நாட்டின் நாகரீக வாழ்வினர் கவனிப்பார்களா?

## ஹாஸ்யப் பகுதி.

மனைவி:— அடுத்தாத்து சேஷன் என்னமோ ஸ்பிரிங் கார்—டம்பல்ஸாம் என்னத்தையோ வச்சுக்கிண்டு, என்னமோ செய்யறானாம். அவன் உடம்பு கல்லாட்டமா இருக்காமே. உங்களுக்கு அதொன்றும் வேண்டியதில்லையா?

புருஷன்:— எனக்கு என்னத்துக்கடி அதெல்லாம். உன்னை அடிக்கிறதிலேயே என் கையெல்லாம் கல்லாட்டமா ஆயிடுத்தே. பின் அது வேறயா வேண்டும்.

... ... ...

காதலன்:— நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பதைப் பிறர் அறியாதிருக்க ஒரு உபாயம் செய்ய வேண்டும்.

காதலி:— அதற்குச் சரியான உபாயம் எனக்குத் தெரியும். அப்படியே செய்வதாக வாக்களித்தால் அதை வெளியிடுகிறேன்.

காதலன்:— கண்ணே! அப்படியே வாக்களித்தேன். சொல் பார்க்கலாம்.

காதலி:— ஆருயிர்க் காதலனே! சொல்லட்டுமா? அதுதான் நமது .... .... விவாகம்.

.... .... ....

சீனு:— அம்மா! அந்த சுவற்றில் என்ன அடித்துக் கொண்டு இருக்கிறாய்.

தாயார்:— புடவை உலர்த்துவதற்குச் சுவற்றில் ஆணி அறைந்துகொண்டிருக்கிறேன்.

சீனு:— அம்மா! ஆணி இல்லாவிட்டால் புடவை நிற்காதா?

தாயார்:— அதெப்படியடா நிற்கும்?

சீனு:— சரி; அப்படியானால் என் வேஷ்டி இடுப்பில் நிக்கமாட்டேங்கிறது. என் இடுப்புலும் ஒரு ஆணியை அடியேன்.

## விற்பனைக்குத் தயார்!

ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கவேண்டிய
உயரிய சாஸ்திரம்.

# ஸ்திரி பால சிகிச்சை.

460 பக்கங்களுக்கதிகம் கொண்டதும், ஆறுபெரும் பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு விஷயத்தையும் இலகுவில் யாவற்றையும் அறிய அகர வரிசையாக தொடுக்கப்பட்டதுமான இந்நூல் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய 400-க்கதிகமான வியாதிகளுக்கும், ஸ்திரிகளுக்கு உண்டாகக்கூடிய 300-க்கதிகமான ரோகங்களுக்கும், கை முறை, செய் முறை, ஆங்கில முறையாகிய மும்முறைகளிலும் சிகிர்சை மார்க்கங்களைக் கொண்டுள்ளது.

பிரசவ வைத்தியம், பிள்ளை வளர்ப்பு, கர்ப்ப காலத்தில் உண்டாகும் வியாதிகள், பிரசவசமயத்தில் ஏற்படும் கோளாறுகள், பிரசவித்தபின் சம்பவிக்கும் கோளாறுகள் முதலியவைகளையும் சம்பூரணமாய் விளக்கி சிகிச்சைகளும் கூறப்பட்டுள்ளது.

இதுமாதிரியான புஸ்தகம் இதுவரை வெளிவந்ததில்லை.

இந்நூல் ஒன்று இருந்தால் பிறர் உதவி இன்றியே வைத்தியம் செய்துகொள்ளலாம். ஆடவ மருத்துவர்களிடம் தங்கள் வியாதிகளை சவிஸ்தாரமாய் எடுத்துக் கூற முடியாத ஸ்திரி ஜாதியினர்கள் தாங்களாகவே இந்நூலை வாசித்தறிந்து வைத்தியம் செய்துகொள்ளலாம். ஆகையால் இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

| | |
|---|---|
| முன்பணமனுப்பினல்<br>புஸ்தகம் விலை ரூ. 3-10-0<br>தபாற்செலவு இல்லை. | வி. பி. மூலமாக<br>புஸ்தகம் விலை ரூ. 3.<br>தபாற்செலவு அணு 13. |

இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

**டாக்டர் எஸ். ஏ. சின்னப்பர்,**

"ஆவே மரியா காட்டேஜ்", **Etaiyapuram, Tinnevelly Dt**


# அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி விருதை, சிவஞான யோகிகள்)

(436-ம் பக்கத்தொடர்ச்சி)

அப்போது குறிகேளாய் மைந்தா நானும்
அறைகிறேன் பேதியொடு குமட்டல் காணும்
தப்பில்லா நோயாளன் நாக்கிலப்பா
தான்மாவு படிதல்வாய் நாற்றங் காணும்
ஒப்பிதமாய் வயிற்றிரைச்சல் உண்டாம் பாரு
ஓயாத புடுங்கலுடன் புளியேப்பங் காணும்
செப்புகிறேன் அவனுக்கு முக்கல் காணும்
சென்மித்த மலமய்யா குழம்பாய்ப் போமே. (216)

போமடா மலமுடன் சீதந் தானும்
பொங்கமுடன் இரண்டுமே கலந்து கொண்டு
ஆமடா மலமதுவே நீரா யேனும்
ஆனதோர் நுரைத்தண்ணீர் தன்னைப் போலும்
மாமடா மாக்கரைத்த சலமா யேனும்
மகிழ்வுட னேபல விதமா யேனும்
பூமியிலே வசந்தகா லத்தில் தானும்
பொங்கமுடன் காணுகிற வேதியின் நேர்மை (217)

அறிந்திடவே வகைதன்னைச் சொல்லக் கேளாய்
அப்பனே பித்தமது மிகுத்துக் காணும்
தெரிந்திடவே வயிற்றில்ரெம்ப வலியுண்டாகும்
தெளிவான காலதனிற் குறட்டுவலி காணும்

பரிவுடனே பலவீனம் இரத்தங் காணும்
பக்குவமாய் வாழுகின்ற மானிடர்க்கு
வரிவாக முன்விதித்த காரணத்தால்
வருமென வேவிண்டு சொன்னேன் நானே. (218)

சொல்லுகிறேன் உனக்காக இன்னங் கேளாய்
சுகமான நுரையீரல் இருதய வியாதி
கல்லீரல் துடிப்புடனே விரணங் காணும்
கனமான அன்னாசய வியாதி தனிலும்
கொல்லும்பின் விடசுரத்திற் றானும்
குணமான குடலின்கிரந்தி வியாதி தனிலும்
அல்லல்செயும் க்ஷயமுடனே உள்மூலந்தான்
ஆகியநோயதில்ரத்தங் காணுமென்றே (219)

மந்தமென்ற பதார்த்தந் தன்னால் காணும்
மகத்தான பேதிக்குக் கொஞ்சம் வாந்திக்கீவாய்
பிந்தியே செய்யுமருந் தொன்று கேளாய்
பலமான காசுக்கட்டி நெல்லிடை பத்துங்கூட்டி
அந்தமுள்ள கருவாப் பட்டை யோடு
அறைகிறேன் நெல்லிடை பத்துங் கூட்டி
சுந்தரமாய் அரைநெல்லு சேர்த்து மேதான்
சுகமான தேனிலரைத்து மூன்று செய்வாய். (220)

மூன்றுவேளை இம்மருந்தை ஈய்ந்தா யானால்
முக்கியமாய்ப் பேதிநின்று ஓடும் பாரு
சான்றோர்கள் சொன்னதொரு வாகடந்தான்
சரியாக மூன்றுநாள் கொடுப்பா யானால்
ஊன்றினதோர் நோயதுதான் தீரும் பாரு
உத்தமனே வுடற் கியாழம் கேளாய்
நின்றதோர் நிலவேம்புக் கியாழம் ஈய்ந்தால்
நிலையான திரேகந்தான் பலக்கும் பாரே. (221)



## பித்தபாண்டு.

அம்புவிதனில் வாழுமானிடர்க்கு
அழித்த பாண்டுவின் நேர்மைதனைத்
தம்பிரான் சொல்கிறேன் தக்க விபரமாய்த்
தன்மைதனைக் கண்டு கொள்வாய். (222)

கொள்ளடா காரணம் விள்ளுகிறேன் கேளாய்
குறித்ததோர் மத்தக் குடலுக்குத்தான்
மெள்ள விழுவது தடைபட்டுப் போனபின்
மெதுவாகப் பித்தப்பையில் சேரும். (223)

சேர்ந்துமே இரத்தத்தில் கலந்துகொண்ட பின்பு
செயலான பித்தபாண்டாய் மாறும்
ஊர்ந்துமே பார்ப்பாய் இதுதான் காரணம்
உள்ளபடி நான் சொன்னேனே. (224)

இன்னொரு காரணம் இயம்புவேன் கேளாய்
இன்பமுள்ள என் சீஷனே நீ
பொன்மயமான யீரல்தனில் வெட்டு
பித்த நீரைச் சுரப்பதில்லை. (225)

சுரக்காததினால் பித்தந்தானே பின்பு
உள் தங்கியே இரத்தத்தில் நின்று
திரக்கமாகவே திரேகத்தைப் பூரிக்க
திட்டமுடன் குணந்தன்னைப் பாரே. (226)

பாரேநீ பித்தத்தில் கல்லுண்டாகியே
பித்தக்குழலைத்தான் அடைத்துக் கொண்டு
ஊறின பித்தம் குடலில் விழாமலே உள்ளுக்கு
நின்றிட்டால் பித்தபாண்டு வாச்சே. (227)

ஆச்சடா பித்தநீர் இறுகின பின்பு
அதினின்று கல்லுண்டாம் பாரு
போச்சடா பித்தப் பையி லனேகம்
பொல்லாத கல்லுகளிருக்கும் பாரே. (228)

பாரடா பித்தக் குழல் சுருங்கினபின்பு
பக்குவமாகவே மலபந்த முண்டாய்
காரடா குழல் நிறைந்து பித்தக்குழல்
கண்டிதமாகவே மூடிக்கொள்ளும். (229)

ஆனபின் நேர்மையால் பித்தபாண்டு கண்டு
அழிக்குதே மானிடர் தேகந்தன்னை
தேனான குன்மம் தன்னைக்கண்டு உரைக்கிறேன்
தெளிவுடன் நீயதைக் கண்டுகொள்வாய். (230)

கண்டுகொள் நீயே தேகம் நகம் மூத்திரம்
கருத்துடன் மஞ்சளாய்க் காட்டுமய்யா
துண்டினில் பட்ட மூத்திரக் கரையுந்தான்
பசுமைநிறங் கண்டு காட்டுங் காணே. (231)

காணடா மலம்வெளுத்துக் களிமண் போலக்
கனத்த தேகத்தில் நமைச்சல் காணும்
வேண்டிய மட்டும் ஆயாசம் தூக்கம்
மயக்கமுடன் கோபம் வந்து தோன்றும். (232)

தோன்றும் வாய்கசப்பு மேதியுற்ற நாடியும்
தோன்றிடும் கண்களும் மஞ்சளாகும்
யின்றதோர் மூளையுங்கெட்டுப் புத்திமாறி
இளைக்குமே தேகந்தான் க்ஷணத்துக்குள்ளே. (233)

க்ஷணத்துக்குள் தீர்ந்திட மருந்து கேளாய்
சொல்வேன் செயலான பேதிக்கீய்ந்தால்
பணப்பை போலொத்த பித்தப்பைக்குள் தான்
பளிச்சென்று கீழ்நோக்கி விழுகும்பாரே. (234)

விழுந்தபின் தேகந்தான் சுபாவம் கொண்டு
மெல்லவே ஆரோக்கியம் கொண்டபின்பு
அழுந்தின அயமுதல் செந்தூரம் தந்துமே
அப்புறம் வியாதியை நீக்குவாயே. (235)

(தொடரும்)

# மருந்து செய்பகுதி.

## மதுமேகத்திற்குக் கஷாயம்.

ஆவாரம்பட்டை, கடலழிஞ்சிப்பட்டை, மருதம்பட்டை, நவாப்பட்டை, கோவை வேர்ப்பட்டை இவைகள் வகைக்கு ரூபாயெடை 3, குரோசாணி, ஓமம், கல்நார், மரமஞ்சள், வெண்குங்கிலியம் வகைக்கு ரூபாயெடை 1, ஆவரம்பிசின், கருவேலாம்பிசின் வகைக்கு ரூபாயெடை $\frac{1}{4}$. இவைகளை இடித்து தூள் செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:– வேளைக்கு 1-ரூபாயெடை சூரணம் எடுத்து $\frac{1}{4}$-படி தண்ணீர் விட்டு, வீசம்படியாக சுண்டவைத்து, கொஞ்சம் தேன் சேர்த்து நாள் ஒன்றுக்கு காலை மாலை சாப்பிடவும்.

உபயோகம்:– உஷ்ணம், தாகம், அதிமூத்திரம் முதலியன குணமாகும்.

(N. B.) அப்ரேக் செந்தூரம் சாப்பிடுகிறவர்களும் இதைச் சாப்பிடலாம்.

## நீர் அடைப்புக்குக் கஷாயம்.

சிறு பீளை, வால் மிளகு, வெள்ளரி விதை, நெருஞ்சில், வெங்காயம் வகைக்கு ரூபாயெடை 1 எடுத்து, அரைப்படி தண்ணீர் விட்டு, அரைக்கால் படியாக்கி நாள் ஒன்றுக்கு காலைமாலையாகச் சாப்பிடவும். இவ்விதம் 6 நாட்கள் சாப்பிடவும்.

## வேறு.

ஈருத வாழையின் தண்டை எடுத்து இடித்து, சாறு பிழிந்து, வடிகட்டிக் கற்கண்டுப்பொடி சேர்த்து வேளைக்கு 3 அவுன்ஸ் கொடுக்கவும்.

# வேதவியாசர் முதற்காண்டம்.

(441-ம் பக்கத்தொடர்ச்சி.)

## கர்ப்பரோகம்.

கேளப்பா பிரண்டைச்சாறு குறிஞ்சாச் சாறும்
  கெடியான இஞ்சிச்சாறு தும்பைச்சாறும்
மீளவே வகையொன்று படிதா னொன்று
  வெள்ளையென்ற அள்ளியிட பருப்பைக்கேளு
நாளாக படியிரண்டோர் பலமாங் காயம்
  நலமாம் பாகில்கரைத்தே யடுப்பிலேற்றி
நாளாகக் கொதித்து வற்றி னொலொன்றாக்கி
  நலமாகச் சூரணித்து நவிலக்கேளே. (11)

நவிலக்கேளு வெந்தயம் பலமிரண்டு
  நலமான வசம்பு திரிகடுகு ஓமம்
நவிலக்கேள் சிவதை மஞ்சள்
  நவச்சாரம் சதகுப்பை எவச்சாரந் தான்
நவிலக்கேள் நிலவாகை திரிபலாதி
  நல்லகுளவி நசுமஞ்சள் வகை கழஞ்சாம்
நவிலக்கேள் முன்சாற்றிலரைத் துருட்டி
  நலமான பாகிலிட்டுக் கிண்டிக் கொள்ளே. (12)

கிண்டியதில் நல்லசீனி பலந்தான் பத்து
  கிருபையுடன் பற்றுதிறக்கிக் கொண்டு
விண்டிடவே னேரண்டத் தெண்ணெய் நாழி
  விதமாக விட்டிழைக்கி வடித்துவாங்கி
யொண்டிடவே மாதவிடை மூன்று நாளும்
  உற்றபடி முக்கழஞ்சி யுண்ணச்சொல்லு
அண்டிநின்ற கர்ப்பத்தின் நோய்கள் பத்தும்
  அகன்றுவிடும் கெண்டைபோம் குன்மம் போமே. (13)





குன்மம்போம் கோலைபோம் வெப்புப் [illegible]
  குடிகெடுத்த திரட்சையொடு [illegible]க்கம்
பொன்னுதலாள் தனக்குப் பிள்ளை யுண்டாம்
  புனிதமுடன் வயிற்றுவலி யெல்லாந் தீரும்
மண்ணமென்ற வயித்தியருக்குத் குரு நூலாகும்
  வேண்டாங்காண் மருந்தினிமேல் வயிற்று நோய்க்கு
கிண்ணமுடன் கெற்பத்தின் புழுக்கள் சாகும்
  தீர்ந்துவிடும் சஞ்சலங்களகன்று தானே. (13)

(தொடரும்.)


தமிழ் பிரமசூத்திராசிரியர்,
கோவிற்பட்டி,
சாமி விருதை, சிவஞான யோகிகளால்
இயற்றப்பட்ட புஸ்தகங்கள்:-

**சிவஞான போத வினாவிடை.**

இது தமிழ் மறையாகமங்களின் தொன்மையையும், பெருமையையும், ஆரியமறை ஆகமங்களின் பொருள் உண்மையையும் கூறும் நூல்.
விலை ரூ. 0—10—0.

**தேவோபாசன தீபம்**

இது விக்கிராராதனையைப்பற்றி அன்னிய மதத்தார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைத் திருத்தும் நூல்.
விலை ரூ. 0—8—0.

**விபூதி ருத்ராக்ஷ தாரண நிரூபணம்.**
விலை ரூ. 0—4—0.

N. B:- வேண்டியவர்கள் புஸ்தகக் கிரயத்தோடு தபால் செலவு 0—2—0 சேர்த்து ஸ்டாம்பாக அனுப்பலாம்.

கிடைக்குமிடம்:- மானேஜர்,
**சித்தன் காரியாலயம்,** பழனி. S.I.

# ஏமாறுதீர்கள்!

எங்கள் வைத்தியசாலையின் மருந்துகள் மிகவும் சிலாக்கியமானதென்னப் பலராலும் புகழப்பட்டுவருதல் கண்டு, சிலர் வேறு மருந்துகளை எங்கள் மருந்துகள் அதாவது சி. எம். சாமி மருந்துகள் என்று சொல்லி ஏமாற்றி விற்பனை செய்து வருகிறதாகத் தெரிகிறது. எங்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியிடங்களுக்கு நாங்கள் யாரையும் அனுப்பவில்லை. எங்கள் ஏஜண்டு என்றும், எங்கள் மருந்துகள் என்றும் யாராவது விற்பனை செய்தால் அதைப் பொதுமக்கள் வாங்கி மோசம் போகாமல் இருக்கும்படி எச்சரிக்கிறோம்.

மருந்து வேண்டியவர்கள் நேரே எமக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

---

## அன்பர்களே!

பொதுஜன சாகாயம் கருதியே பாலர்களின் பிணிகளை அறவே நீக்கும் கீழ்க்கண்ட மருந்துகளின் விலையைக்குறைத்திருப்பதால், குழந்தைகளுள்ள ஒவ்வொரு குடும்பத்தாரும் இதனைவாங்கி உபயோகித்து நன்மையடைவீர்களென நம்புகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| பாலகுடோரி புட்டி 1-க்கு | விலை | ரூ. | 0—8—0. |
| பாலசஞ்சீவி | ,, | ,, | 0—8—0. |
| கஸ்தூரி மாத்திரை | ,, | ,, | 0—8—0. |
| கோரோஜனை மாத்திரை | | ,, | 0—8—0. |

**மலையப்பசாமி வைத்தியசாலை.**

**பழனி. S. I.**


# நாடகப் பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது.)

(451-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்கம் 5] [களம் 1

சுகுணசுந்தரி, தோழிகள், சுகுணன்.

காலம் — இரவு. இடம் — கன்னிமாடம்.

சுகுணசுந்தரி:— (தனிமொழி.)

ஏது ஒரு நாளுமில்லாது இன்று என் தந்தையார் முத்துமாலை, மோகனமாலை ஆகிய இரு தோழியரையும் அழைத்தனர் மந்தரம்? அவர்கள் அமைச்சர்கள் புத்திரிகளன்றோ? அன்றி என்னுடன் கன்னிமாடத்து உறைபவரன்றோ? இப்படியிருக்க அழைத்த காரணம் என்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. என் காதலர் நுழையொணாப் பூஞ்சோலை வந்தது அவர்தம் காதிற்கெட்டியதோ? அதுபற்றி அவர்தம் தவறான நடத்தையை விசாரித்தற்கு இவர்கள் சாக்ஷி தேவை என எண்ணி அவர்களை வருவித்ததோ? ஆம்; அப்படித்தான் இருக்கும். அவர்மீது குற்றம் சாட்டப்படின் அவருக்கு என்ன ஏற்படும்? வேத்தவையில் அவமான காரணமான அபராதமன்றோ? அவ்விதமாயின் என்செய்வது? என்காதலை பிதாவுக்குத் தெரிவித்துக் காதலர் ஒருவரை ஒருவர் சந்தித்துக்காதலை வெளியிடுவது இயற்கையென்பதை விளக்குதல் வேண்டும்.

அந்தோ! அவர்தம் வரலாறு சாம்பர்பூத்த நெருப்பன்னவன்றோ இருக்கின்றது. அவர்தம் குணங்களையும், சௌந்தரியத்தையும், வீரத்தையும், கல்வி, கேள்விகளையும், சாமுத்திரிகா லக்ஷணங்களையும் கருதின் க்ஷத்திரிய குலதிலகமன்ன விளங்குகின்றது. உலகில் தாய் செல்வத்தையும், தந்தை விவேகத்தையும், பந்துக்கள் குலத்தையுமன்றோ ஒரு மணாளன் விஷயமாய்க் கருதுவர். அவரோ இயற்கையில் செல்

வரல்லர். என் தந்தைதன் ஆதரவுள்ளவரை வறுமையறியார். வித்தையிலும், வீரத்திலும் ஒப்புயர்வில்லாதவர். குலநலமோ தெரியாதவர். அதுபற்றி என் தாயும், பந்துக்களும் அவர்தனை என் நாயகராக அங்கீகரியார்கள். தந்தைக்கோ நல்வேளையாய் அவர்மாட்டு அன்பு பற்றியுளது. அவர்தம் சோணாட்டு வெற்றியோ தந்தைக்கு மிக்க மதிப்பினைத் தந்துளது. அவர் விஷயமாய் தந்தை பேசும் சமயமெல்லாம் நற்குடிப் பிறந்தவராகும்; ஈசன் கருணையால் சமீபமே அவர்தம் பிறப்பு வெளியாகவேண்டுமென்கின்றனர். அது வெளியாயின் ஒருவரும் எனக்கு இடையூறுசார். அவ்வாறாயினும் நான் அதனைச் சற்றும் லக்ஷியம் செய்யேன். எவ்விதமும் என் காதலைத் தோழியர் மூலமே என் தாய்க்கும், அவர் மூலம் என் தந்தைக்கும் அறிவித்து அவருக்கே மாலையிடுவேன்.

(மௌனம்.)

இன்று பஞ்சமியாதலால் சந்திரோதயம் பத்துநாழிகைக் கன்றோ? அதன் பிறை சற்றுத் தேய்ந்துளதேனும், காந்தி அவ்வளவாய் மங்கக்காணோம். வானெங்கும் மேக படலமற்றிருத்தலால் அதன் ஒளி செவ்வனேயுளது. இளவேனிற் பருவமாதலின் தென்றல் சுகமே வீசுகின்றது. ஆங்காங்கு மல்லிகை, முல்லை, சம்பங்கி, மனோரஞ்சிதம் முதலிய கொடிகள் பூத்து நறுமணங் கமழ்கின்றன. இம்மேடை சந்திரகாந்தக் கல்லால் அமைந்திருப்பதால் சந்திர கிரணங்கள் பட்டுத் தண்ணென்று வீற்றிருப்பதற்கு ஆரோக்கியமாயுளது. ஆதலின் தம்பூரெடுத்துச் சுருதிகூட்டி நற்கீதங்கள் பாடுவேன்.

ஏது ஒருநாளுமிலாது இன்று ஒரு நாயகி தன் விரகம் எடுத்தோதும் பதம் தற்செயலாய் என் வாயினின்றும் வந்துளது. ஆம்; இது இயற்கைதானே. நான் கண்டேன் காதலரை உத்தியானவனத்தில். அவரை மார்புறப் புல்லித்தழுவுவான் எடுத்தது ஆசை மனத்துள், இடையே புகுந்து தடுத்தது நாணம். எங்கு அவ்வாசை பெருகித் தோழியர் முன்னிலையில் இலச்சைகெட மனம் அவரை இறுகத்தழுவ உன்னுமோவெனப் பயந்து எடுத்தேன் ஓட்டம். கண்களோ பின்னுமவர்தமைக்காண விரும்பியதால் காலில் முட்டைத்ததென அபிநயித்து அவர்முகம் திரும்பினேன். உண்மை அறிந்து பரிகசித்தனர் தோழியர். வந்தேன் கன்னிமாடம்.



அவர்களோ இதுசமயம் பிரிந்துளர். ஆதலின் தனித்துள்ளேன். தென்றல் புலியன்னப் பாய்கின்றான். பிறமரங்களோ காது செவிடுபட ரீங்காரம் செய்கின்றன. நறுமணங்களோ ஆவி பருகுவது போன்று கமழ்கின்றன. அன்றிலின் ஓசையோ என் காதலன் அருகின்றித் தனித்திருத்தலை உணர்த்துகின்றது. இவை காரணமாய் காதல் பெருகுகின்றது. உடலெங்கும் வியர்வையாகி, மயிர்கூச்சு உறுகின்றது. இடை ஆடை நழுவுகின்றது. ஜோடித்தனங்கள் விம்மிக் கச்சினைக் கிழிக்கின்றன. தேகவனல் பட்டு முத்தாரங்கள் சுன்னமாய் உதிர்கின்றன. கைவளையல்கள் கழற்கின்றன. கால்கள் ஓய்வினை அடைகின்றன. அங்கம் தளர்வினை அடைகின்றது. கூந்தல் அவிழ்கின்றது. மனம் நாயகனை நாடுகின்றது. ஆகலின் இன்னினி என்னால் தாங்கொணாது எங்கு மூர்ச்சையாவேனோவென அஞ்சுகின்றேன். என் காதலர்தன் குலநலந் தெரியாக்காரணத்தால் என் விரகநோயினை எவர்பால் எடுத்து ஓதவும் நாவெழாதுளது. ஏது! என் காதல் ஓர் தலையாய் முடியுமோ? அதுபற்றி யான் கடையே அடையவிருக்கும் அவஸ்தை அவரைப் பெறாக்காரணத்தால் மரணாவஸ்தை ஆமோ? தாயே! மீனாம்பிகா! யானும் இவ்விறைவனுக்கு ஏக புத்திரியாய்ப் பிறந்து என் மனப்படி என் காதலரை அடையும் வழியிலாது தவிப்பதிலும் அவர்போன்று அனாதையாய் என்னையுமாக்கி எங்கள் இருவர் நட்பினைப் பயன்படுத்தி இருத்தல் கூடாதா?

அந்தோ! யான் விரகத்தால் மரணாவஸ்தையுறினும் இனி வரும் பிறப்பிலாவது அவரை அடைவேனோ? அவ்வாறு யான் இறப்பின் என்னிரு முதுகுரவர் கதி என்னாம்? பாண்டி நாட்டின் விதி என்னாம்? அவ்விருவர் அழிவதால் நாடு பிறனதல்லவோ ஆகும். பலகாலமாய் வாழையடி வாழையெனத் தழைத்தோங்கிவந்த பாண்டியர் ஆட்சி நான் ஒரு பெண் பிறந்த காரணத்தால் நசித்தல் தருமமா? இதுவும் இன்னாட்டின் கர்மமா? அம்பிகா! எங்களை இவ்வாறாக்க உன் வர்மமா? யான் ஏதென்றுரைப்பேன்? பாலாம்பிகா! என் காதலர் நற்குடிப்பிறந்தாரென விளக்குதல் கூடாதா? எங்கள் இருவர் காதல் பயனுதல் தகாதா? பாண்டியர்தம் குலம் விளங்குதல் ஆகாதா? அம்பிகா! உன் சித்தம் இரங்கிவிட்டால் மூகனும் பிரசங்கி ஆகானோ? குலநலமிலானும், உத்தம வழி உதித்

தோன் ஆகானா? ஆதலின் எல்லாம் உன் அருளே. உன்னைத் திரிகரண சுத்தியாய்க் கும்பிடுகிறேன். நீயே கருணைபுரிதல் வேண்டும். (மௌனம்.) (தேவியைப்பற்றிப் பாடுதல்.)

ஏது! திடீரென்று வலது கண் துடிக்கின்றது. இது எனக்கு இனி வர இருக்கும் கேட்டினிற்கன்றோ அறிகுறி. எனக்குக் கேடு என்றால் எனதன்னைக்கோ அன்றி அப்பனுக்கோ பேராபத்து வருதலேயாம். அன்றி எனது காதலர் சேனாதிபதியாருக்கு ஆபத்து சம்பவிக்குமோ? ஆம்; ஆம்; அப்படித்தான் இருக்கவேண்டும். அன்றேல் என் தோழியர் மன்னரவை அழைக்கப்படுவானேன்? அடீ! வீழ்ந்ததடி இடி என் தலையில். பாவியெனைக் காதலித்த காரணத்தால் மனோரஞ்சிதமான புருஷோத்தமருக்கு வந்ததடி ஆபத்து. ஐயோ அவைக்கேகிய தோழியரையுங் காணேன். என் செய்வேன். இத்துயர் எவ்வாறு சகிப்பேன்? (துக்கித்துப் பாடுதல்.)

அதோ வருகின்றனர் முத்துமாலையும் மோகனமாலையும். (இருவர் பிரவேசம்) ஏது அவர்கள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் வருகின்றனர்? அவர்களையணுகிக் காரணம் வினவுவேன். (முன் போந்து) அடீ! தோழிகாள்! ஏது இவ்வாறு வருவது? என் தாய் தந்தையருக்கு ஏதேனும் ஆபத்து விளைந்ததோ?

முத்துமாலை:— அவ்வித நிகழ்ச்சிகள் பெற்றோர்க்கில்லை

சுகுணசுந்தரி:— மோகனமாலா! பின்னர் ஏன் நீங்கள் கண்ணீர்விட்டழுவது?

மோகனமாலை:— தாயே! வரகுணவழுதியார் மரணம் காரணமாகும்.

சுகுணசுந்தரி:— என்னடீ! திடகாத்திரராய் அஸ்தமனத்திற்குச்சற்றுமுன் உத்தியானத்தில் இருந்தவர் எவ்வாறடி திடீரென மாண்டார்?

முத்துமாலை:— அம்மணீ! கொலையுண்டாராம்.

சுகுணசுந்தரி:— அடீ! யாரடி அவரைக் கொன்றது?

மோகனமாலை:— தாயே! கொன்றது நாகானந்தராம்.

சுகுணசுந்தரி:— அடீ! அவரைக் கொலைஞரெனக் கூறி



யவன் நாவு அழுகி, அறுந்து, அப்போதே விழவில்லையா? யாவனடீ அவர்மீது கொலைக்குற்றம் சாட்டியவன்?

முத்துமாலை:— தாயே! அவர் சுந்திரகுமாரரேயாம்.

சுகுண சுந்தரி:— ஏன் அடீ! அப்பாவியும் இன்று உத்தியானம் வந்திருந்தானா?

மோகனமாலை:— ஆம்; அவரும் உத்தியானம் வந்திருந்தாராம். நாம் பேசிய வார்த்தைகள் எல்லாம் கேட்டனராம்.

சுகுணசுந்தரி:— அடீ! தோழீ! அப்படியாயின் அவன் தானடி கொலைஞன். அட! மாபாவி! மகா வீரரான புருஷோத்தமரை எதிர்க்கும்வலியற்று கிழவனாரையா கொன்று பழியை அவர்மீது சுமத்தினாய். தீர்க்காலோசனை குன்றி, என் பெற்ற தந்தையும், அவர்தம் அங்கத்தினரும் நாகானந்தரே கொலைஞரெனக்கூறி மரணதண்டனை விதிப்பினும் என்னைப் பெண்டாயடையும் கனவை ஒழி. அதுபற்றி இராஜ்ஜியம் பெறும் மனப்பால் குடிப்பதை விடு. என்னடீ! அவையோரும், தந்தையாரும் அதனை நம்பினரா?

முத்துமாலை:— அம்மணீ! விசாரணை முடிந்தது. வாதம் நடந்தது; முடிவு கூறப்படவில்லை. இற்றைக்கு எட்டாம் நாள் கூறுவாராம் தங்கள் பிதா.

சுகுணசுந்தரி:— ஆயின் என் தந்தையைக்கண்டு உற்றது கூறி, நாகானந்தரை விடுவிப்பேன். அவர்தம் குலநலம் தெரியாக்காரணத்தால் என்னை அவருக்கு வதுவைசெய்ய முடியாதென என் தந்தையும், மற்றோரும் செப்பினும் என் ஜென்மமெல்லாம் கன்னியாய்க் காலங்கழிப்பேன்.

சுகுணன்:— (போந்து) கண்ணே! உன் வாய்மொழி அனைத்தும் உன்னைக்காண வரும்பொழுதே என் காதில் விழுந்தன. என் சந்தேகமுற்றும் அகன்றது. ஆயினும் உண்மையை உள்ளவாறு அறிதல் என் கடமை. ஆதலின் விடைகொடு அதனை ஓர்ந்து தெரிய. சென்று வருகின்றேன்.

சுகுணசுந்தரி:— தந்தாய்! அப்படியே செய்க. மனதிற் பதிந்த பாறை நழுவியது. (சுகுணன் மறைதல்)

தோழிகாள்! மனம் பாயலை நாடுது. சயனக் கிரகம் செல்வோம் வாருங்கள். (மூவரும் மறைதல்.)

(தொடரும்.)

# * செய்தித் திரட்டு. *

இந்தியாவில் சோனேபூர் ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம் உலகத்திலேயே மிகப்பெரியதாம். இதன் நீளம் 2315-அடிகள்.

.... ... ....

சில தினங்களுக்கு முன் பட்டார் நகருக்குள் கழுதைப் புலிகள் புகுந்து சுமார் 20 குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டனவாம்

.... ... ....

கிரேட் பிரிட்டனில் கள்ளத்தனமான சேர்க்கையால் வருடம் 1-க்கு 25000 அநாமதேயக் குழந்தைகள் பிறக்கின்றனவாம்.

... .... ...

உலகிலேயே பெரிய குடியிருப்பு மாளிகை ரோம் நகரில் கிறிஸ்தவ மதத்தலைவரான போப் வசிக்குமிடமாம். இதற்கு. வாடிகன் என்று பெயராம்.

.... ... ...

இங்கிலாந்து மோட்டார் டிரைவர்கள் சென்ற ஆண்டில் 3750000 பவுன்கள் அபாராதமாக செலுத்தி இருக்கிறார்கள் என்று ஒரு கணக்கு கூறுகிறது.

.... .... ...

கொழும்பு, இந்தியன் நேஷனல் நியூஸ் மார்ட்டின் புரொப்ரைட்டரும், லக்ஷ்மி அண்ட் கம்பெனியின் மானேஜிங் பார்ட்னருமான ஸ்ரீமான் P. M. R. முத்துசாமி ரெட்டியார் அவர்கள் கொழும்பில் புதிய பிலிம் டிஸ்டிரிபியூடிங் கம்பெனி ஒன்று ஏற்படுத்தி இருக்கிறார். இதனால் கொழும்பிலுள்ள தியேட்டர்காரர்களுக்கும், இந்திய பட முதலாளிகளுக்கும் மிகுந்த சௌகர்யத்தை உண்டாக்கும் என்று நம்புகிறோம்.





உலகிலுள்ள ஏழு அதிசயங்கள் வருமாறு:—

1. எகிப்து பிரமட்ஸ். 2. காரியோ அரசர் மாஸோலஸின் கோரி. 3. எபிஸஸில் தியான தேவதை கோயில். 4. பாபிலோனிலுள்ள தோட்டங்களும் சுவர்களும். 5. ரோடிஸிலுள்ள கலோசஸ். 6. ஜூபிடர் ஒலிம்பிக் தேவனது பொன், தந்த விக்ரகங்கள். 7. அலெக்ஸாண்டிரியாவில் எகிப்து அரசர் டாலமி பிடல்ப்ஸ் கட்டுவித்த பாரஸ் என்ற கடிகார ஸ்தம்பம்.

தென்னிந்தியாவில், மேட்டூரிலுள்ள அணைக்கட்டே உலகிலுள்ள அணைக்கட்டுகளில் பெரியதாம். கட்டிமுடிக்க ஆறு வருஷம் சென்றது. மொத்த செலவு 478 லக்ஷம் ரூபாய். 93500 கன அடி தண்ணீரைத் தாங்குகிறதாம்.

.... .... ....

அகில இந்திய பெண்கள் மகாநாட்டுப் பகுதி பெண்கள் கூட்டம் வருகிற டிசம்பர்மாதம் விருதுநகர் மாதர் சங்கத்தில் நடைபெறுமென கோவில்பட்டி ஸ்டாண்டிங்கமிட்டி மெம்பர் ஸ்ரீமதி A.G. கோமதிநாதன் அம்மாள் அவர்கள் எழுதுகிறார்

.... .... ....

கெர்விபராண்டி என்ற ஒரு பிரபல சோதிடர் நெப்போலியன் மறுபடியும் உலகில் பிறந்துவிட்டான் என்றும், அவனுக்கு வயது 15 ஆகிறது என்றும், அவன் மாஸ்கோ நகரின் குறுகிய வீதிகளின் மத்தியிலுள்ள ஒரு சாதாரண வீட்டில் வசிக்கிறான் என்றும், இப்போது நெப்போலியன் சரித்திரத்தைப்படித்து வருகிறான் என்றும், சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறான் என்றும், இன்னும் 10 வருஷங்களில் தன் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பான் என்றும் கூறுகிறார்.


## தேவை.

"சித்தன்" பத்திரிகை விற்பனை செய்யவும், சந்தாதாரர்கள் சேர்க்கவும், முக்கிய நகரங்களுக்கு பொறுப்பும், செல்வாக்கும் உள்ள ஏஜண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும். ஒரு அணா ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர், 'சித்தன்' பழனி.

# உள்ளூர்ச் செய்தி.

## பழனிடவுன் காங்கிரஸ் கமிட்டியார்.

2—10—37-ல் ஸ்ரீமான் E. S. மணி அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் ஸ்ரீமான்கள் E. S. மணி, M. மாயப்பபிள்ளை, P. நடராஜ பண்டாரம் ஆகிய மூவரையு[ம்] வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுத்[து] 12—10—36 ல் இந்நகருக்கு விஜயஞ்செய்யும் அகில இந்தி[ய] காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால்நேருவை வரவேற்[க]வும் அதுசம்பந்தமான சகல காரியங்களையும் கவனிக்கும்ப[டி]யும் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

ஷண்முக சுந்தரம், காங்கிரஸ்கமிட்டி காரியதரிசி

3—10—36 ல் நடைபெற்ற

## நகரசபைக் கூட்டத்தில்

அகில இந்தியகாங்கிரஸ்தலைவர் பண்டித ஜவஹர்லா[ல்] நேரு அவர்கள் இந்நகருக்கு விஜயஞ் செய்யுங்காலை[யி]ல் அன்னாருக்கோர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டுமென்று ஷை சபையார் ஏகமனதாய் ஓர் தீர்மான[ம்] நிறைவேற்றி இருக்கின்றனர்.

## உபந்யாசம்

இந்நகர் பெரியகடைவீதி நாடாக்கர்மடத்தில் 8-10-36[ல்] மாலை 6-மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியா[ர்] சுவாமி அவர்களால் "மானிடப்பிறவியும் கடமையும்" என்[ற] னும்பொருள்பற்றி ஒருஅருமையான சொற்பொழிவு நிகழ்[த்]தப்பட்டது.

### சந்தா நேயர்களுக்கு

சித்தனுக்கு கடிதம் எழுதும் அன்பர்கள் தயவுசெய்[து] தங்கள் சந்தா நம்பரை தவறாமல் எழுதவேண்டும். கம்ட குறிக்கப்படாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர், "சித்தன்" பழனி

வைசிய குலத்தில்

## விதவா விவாஹம்.

18994

சென்ற மாதம் 11-உ சேலம் நகரில் என்றுமில்லாத புதிய சம்பவம் ஒன்று நடைபெற்றது. நம் நாட்டில் சமூக சீர்திருத்தத் துறையில் எல்லா சமூகங்களும் முன்னணிக்கு வந்தும், ஆரிய-வைசிய சமூகம் மட்டும் மறைந்து, பயந்து, பதுங்கியே வந்தது. நாட்டுக்கோட்டை நகரத்தார், நடார் சமூகம் முதலியன விதவாவிவாஹத்தில் இறங்கிவிட்டனர். பாரம்பரியமாய் ஆரிய-வைசிய சமூகத்திலிருந்துவந்த கொடிய பழக்கத்தை வெட்டிவீழ்த்திய பெருமை, ஸ்ரீமான் ராஜு செட்டியாரையே சேரும்.

சுமார் 14-வயதுள்ள நாகரத்தினம் என்ற பெண், சுமார் 5-மாதங்களுக்கு முன் தன் கணவனை இழந்தாராம். ஷையாரை ஸ்ரீமான் ராஜு செட்டியார் பகிரங்கமாக பலர் முன்னிலையில் அன்று விவாஹம் செய்துகொண்டாராம். ஆரிய-வைசிய வகுப்பில் இதுவே முதல் விதவா விவாஹம் என்று நினைக்கிறோம். ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் அன்று நடந்தனவாம். பல பிரமுகர்கள் கலந்துகொண்டதோடு, இத்தகைய விவாஹத்தை ஆதரித்தும், புகழ்ந்தும், சொற்பொழிவாற்றினார்களாம்.

இச்சம்பவத்தை, சீர்திருத்த இயக்கங்களின் எதிரொலியென்றே நினைக்கிறோம். மன உறுதியுடனும், வீரத்துடனும் பண்டையவழக்கத்தை உடைத்தெறிந்த ஸ்ரீமான் ராஜு செட்டியாரின் மனோ உணர்ச்சி பாராட்டத்தக்கதே. பெண் விடுதலையிலும், சமத்வத்திலும் ஆர்வம்கொண்டோர் அனைவரும் இதைப் பாராட்டுவார்கள் என்றே எண்ணுகிறோம்.


## ஸ்ரீ பழனியாண்டவர் தாயத்து.

அன்பர்கள் மனக்கவலைகளை நீக்கி சரீர சௌக்கியம், ஆயுள் விர்த்தி, சந்தான பாக்கியம் உண்டாக்கும்.

தாயத்து 1க்கு ரூ. 1. ஸ்பெஷல் தாயத்து சார்ஜ் வேறு.

**S.V.** ராஜப்பா, மலைக்கோவில் மிராஸ், பழனி. S.I.

## உங்கள் அடுத்த படம் எது?

**நடிகர்கள் தேவையா?**

தமிழ்நாட்டில், ஒவ்வொரு மாதமும் புதிய படங்கள் உற்பத்தியாக்கப்படுகின்றன. முந்திய படங்களில் நடிகர்களைப்பற்றி பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் வெளியாயிருக்கின்றன. இக்குறைகளை நிவர்த்திக்கவும், பொதுஜனங்களின் அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யவும் பட முதலாளிகள் புகழடையத் தக்கவிதமான நடிகர்கள் எம்மிடம் உண்டு. சங்கீத ஞானம், ஆங்கிலப் படிப்பு, விரும்பத்தக்க தோற்றம் முதலியன ஒருங்கே அமையப்பெற்றவர்கள். கலை வளர்ச்சியில் ஆர்வமும், பொதுஜன மேடையில் ஊக்கமும், சமூக சீர்திருத்தத்தில் பேரவாக் கொண்டவர்களுமாவர்.

விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், "சித்தன்" பழனி.

## "தமிழ் மலர்".

**ஓர் இனிய தமிழ் மாதப் பத்திரிகை.**

. நவரசம் பொருந்திய, பல சிறந்த மேதாவிகளால், பற்பல கட்டுரைகள் எழுதப்பெற்று தமிழ் மணம் கமழும்படி வெளிவருகிறது.

உள் நாடு வருட சந்தா ரூ. 1—0—0.
வெளிநாடு வருட சந்தா ரூ. 1—8—0.

விளம்பர விகிதங்களுக்கு நேரே எழுதவும்.

மாதிரிப் பிரதி இனம்.

மானேஜர், "தமிழ் மலர்" ஆபீஸ், தஞ்சாவூர்.

## 'கிராம ஊழியன்'.

(மாதம் இருமுறை வெளிவரும்)

இந்திய விவசாயிகளின் முன்னேற்றம் ஒன்றையே பெரு நோக்கமாகக்கொண்டு கடல் கடந்த இந்தியர்களின் அபிவிருத்தியை நாடி உழைப்பது. சாதி சமய பேதங்களை வெருட்டி சமதர்ம ஒற்றுமையை நாட்ட முற்படுவது. பொதுஜன ஸ்தாபனங்களில் ஏற்படும் சீர்கேடுகளை அரசன், ஆண்டி என்ற வித்தியாசமின்றி, அச்சமற்றகண்டனங்களாலும், ஆணித்தரமான பதில்களாலும், தயை தாக்ஷிணியம் இன்றி நிர்தாக்ஷண்யமாய் எடுத்துக்காட்டி சீர்திருத்த முயல்வது. கிராமப் புனருத்தாரணத்திற்காகவே தோன்றியது.

வருட சந்தா. உள் நாடு ரூ. 2. வெளிநாடு ரூ. 3.

மானேஜர், கிராம ஊழியன் ஆபீஸ்,
துறையூர், திருச்சி ஜில்லா.

## 'சுதந்தரன்'.

**சிறந்த தேசியப் பத்திரிகை.**

பர்மா இந்தியர் முன்னேற்றங்கருதி
சிறந்த முறையில் பாடுபடும்
தேசியப் பத்திரிகை.

பல அறிஞர்களின் கட்டுரைகளுடனும், சீரிய விளக்கங்களுடன் பிரதி வாரம் வெளியன்றுமிளிர்கின்றது பர்மா பத்திரிகை உலகில், பல்லாயிரக்கணக்கான அபிமானிகளின் ஆதரவினைப் பெற்றிலங்குகின்றது.

| | | | |
|---|---|---|---|
| வெளிநாடு | வருட சந்தா | ரூ. | 7—0—0. |
| | 6–மாதம் | ,, | 4—0—0. |
| உள்நாடு | வருட சந்தா | ,, | 5—0—0. |
| | 6–மாதம் | ,, | 2-12—0. |

மானேஜர், சுதந்தரன்,
337 — 37வது வீதி, இரங்கோன்.

## பாரதானந்த ஸாதக அலங்காரம்.

ஆசிரியர்: பண்டித C. முனுசாமி பிள்ளை.

ஒவ்வொருவரும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தது எல்லோராலும் எளிதில் உணர்ந்துகொள்ளக்கூடியது.

தாளங்கள் தெரியவில்லையே என்னும் கவலை இனி வேண்டாம். 5-ஜாதிகளிலும் கதிபேதங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

இப்புத்தகம் பக்கவாத்தியங்களுக்கென்றே தனியாக 35-தாளங்களும் பஞ்சஜாதி ததிங்கிணத்தோம் விபரங்களும்கணக்கிட்டு வெளியிடப்பட்டுள்ளது. பக்கவாத்தியங்களான மிருதங்கம் தவுல், கஞ்சிரா, கடம் ஆகிய ஒன்றைப் பயின்றுகொள்ள விருப்பமுடையவர்களும், சிறிது கற்றுக்கொண்டவர்களும், தாள சம்பந்தமாகத் தெரிந்துகொள்ள அவர்கள் படும் கஷ்டங்களும், பணச்சிலவும் கொஞ்சமல்ல. இப்பெருங்குறை இப்புத்தகத்தால் நீங்கிவிடும். கீர்த்தனை, ஸ்வரம், பாடும் வித்வான்களுடன் இனி பயமின்றி வாசிக்கலாம். சமம், ¼, ½, ¾, இடங்களில் இடஞ்சலின்றி தவறாமல் நீங்கள் இனி வாசிக்கமுடியும்.

இப்புத்தகம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வெகு உபயோகமானது. இன்றைக்கே ஒரு புத்தகத்திற்கு எழுதுங்கள்.

இப்புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—10—0.

தபால் சிலவு வேறு.

கிடைக்குமிடம்:- மலையப்பசாமி வைத்தியசாலை,
பிராஞ்ச்:- 1-54, அருணசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.



## ‘லக்ஷ்மி’

ஓர் நவீன மாதப் பத்திரிகை.

ஆராய்ச்சிக் கட்டுரைகள், இனிய கதைகள், ஹாஸ்யம், விகடம், செய்தித்துணுக்குகள் முதலியன நிறைந்தது. எளியசெந்தமிழ். அழகிய அட்டையுடன் கூடியது. அதிகப் பக்கம், குறைந்த சந்தா. ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது.

சந்தா உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு 1—8—0.

விபரங்கட்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், “லக்ஷ்மி” ஆபீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.



## ‘செங்குந்த மித்திரன்’

(ஓர் உயர்ய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அனுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா:- உள்நாடு ரூ. 1—8—0.
வெளிநாடு ரூ. 2—0—0.

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
138, பவளக்காரத்தெரு, சென்னை.



## ‘அறிவு’

(ஓர் அறிவியல் மாத வெளியீடு)

பாட்டுகள், படங்கள், கதைகள், விஞ்ஞான ஆராய்ச்சிகள் முதலிய பல அரியவிஷயங்கள்நிறைந்தது.

வருட சந்தா உள் நாடு ரூ. 1-0-0.
வெளி நாடு ரூ. 1-8-0.

மானேஜர், “அறிவு”
சாத்தன்குளம், திருநெல்வேலி.



## ‘லோகோபகாரி’

பழமையும், புதுமையும் கொண்ட வாரப்பத்திரிகை.

42-ம் ஆண்டு நடக்கிறது.

இனிய கதைகள், தேசீய பாடல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், உலக அதிசயங்கள் முதலியன கொண்டு இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்ட செய்தித் துணுக்குகள் பொதிந்து வெளிவருகின்றன.

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்.

வருட சந்தா ரூ. 4—0—0.

“லோகோபகாரி”
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.

## புது உலகம்.

ஓர் நவீன ஆராய்ச்சி சஞ்சிகை.

பல அரிஞர்களுடைய கட்டுரைகள், உலகநிகழ்ச்சிகள், தத்துவஞான, விஞ்ஞான பொருளாதாரக் குறிப்புகளும் கொண்டது.

சந்தா உள் நாடு ரூ. 1—8—0 வெளிநாடு 2-வெள்ளி.

"புது உலகம்" ஆபீஸ், தங்கசாலைவீதி, சென்னை.

---

தேவை! ஏஜண்டுகள் தேவை !!

## 'ஜகன் மோகினி'

189934

மாதாந்த நாவல் சஞ்சிகை.

13-வது ஆண்டு நடக்கிறது. ஜீவிய சந்தா ரூ. 25·

வருஷ சந்தா ரூ. 1—8—0. தனிப்பிரதி அணா 2.

ஜீவிய சந்தா நேயர்களுக்கு இனாம்! இனிமேல் நமது நூலாசிரியையால் எழுதப்பட்டு, நம்மால் பிரசுரிக்கப்படும் எல்லா நாவல்களும் இனாமாக அளிக்கப்படும்.

ஜெகன்மோகினி ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

ஞானமுள்ள பெற்றோர்
தம் மக்களுக்குத் தேடும் சிறந்த ஆஸ்தி

## சிறுவர் அறிவுக்கதிர்.

இரண்டாம் ஆண்டு.

பாலர் முதல் பெரியோர் வரை வாசித்து ஆனந்தம் அடையும் மாதப்பத்திரிகை. சிறுவர்கள் அறிவு விருத்திக்குத் தமிழ் நாட்டில் உலாவும் முதல் பத்திரிகை. கல்வித்துறையில் சிறந்த அநுபவம் உடையவர்கள் கட்டுரையைக்கொண்டது. மாதிரிக்காப்பிக்கு ஐந்து காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.

வருட சந்தா உள்நாடு 12 அணா. வெளிநாடு 1—4—0.

டிபாசிட் கட்டும் ஏஜண்டுகள் தேவை.

விலாசம்:— சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ்,
ஈரோடு. (தென்னிந்தியா.)

---

அச்சமற்ற கண்டனம்! —
— ஆணித்தரமான அபிப்பிராயம்

ஏழை, பணக்காரர் வேற்றுமையற்றது, பாரதநாட்டின் தொழில், பொருள் அபிவிருத்திக்கு உழைப்பது,
—— தொழிலாளர் நலன் நாடுவது ——

## "விஸ்வ பந்து"

பத்திரிகையே.

ஆசிரியர்:- தி. ம. நடராஜன் அவர்கள்.

இதனை ஆதரிப்பது உங்கள் கடமையல்லவா?

வருட சந்தா

உள்நாடு ரூ. 3—0—0. வெளிநாடு ரூ. 5—0—0.

தனிப்பிரதி அணா 0—1—0.

காரியஸ்தர், விஸ்வபந்து, காரைக்குடி.

---

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்.

---

## 'வர்த்தகமணி'

வர்த்தகசம்மந்தமான விஷயங்களை அடிப்படையாய்க் கொண்டு, நவீன இலக்கியம், நாவல், சிறுகதை, ராஜீயம், புராதன சரித்திரசம்பந்தமான விஷயங்களுடன் வெளிவரும்

மாத வெளியீடு.

விளம்பரத்திற்குப் பிரதானமானது.

வியாபா[illegible]படைய தொண்டாற்றுவதில் எப்பத்திரிகைக[illegible]னியிலிருப்பது.

வருடசந்தா [illegible]யதுரைக்கு ரூ. 0—4—0.
" இந்தியாவிற்கு ரூ. 0—6—0.
" வெளிநாட்டிற்கு 0-12—0.

தனிப்பிரதி 0—0—3. வெளிநாட்டிற்கு 0—0—6.

மானேஜர், "வர்த்தகமணி" ஆபீஸ்,
ராயகோபுரம் வீதி, மதுரை.

# “வம்பன்”

கதைகளும், விகடங்களும் நிரம்பிப் படங்களுடன் கூடிய செந்தமிழ் மாத வெளியீடு.

பாலர்முதல் விருத்தர்வரை ஆண் பெண் யாவரும் விரும்பும் கட்டுரைகள் பல செறிந்து விளங்கிப் படிப்போர்களை என்றும் மகிழச்செய்யும்.

ஆசிரியர்:— த. இராமநாதம் பிள்ளை.

தனிப்பிரதி அணா 2.

உள்நாடு வருட சந்தா ரூ. 1–4–0.

மலாய்நாடு ஷை ரூ. 2–0–0.

வம்பன் ஆபீஸ், 304, வால்டாக்ஸ் ரோடு,
பி. டி. மதராஸ்.

# ‘நவீனம்’

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை

ஆராய்ச்சி கட்டுரைகள், முதுமொழிகள், சினிமா விமர்சனம், சம்பாஷணை முதலியன கொண்டு நாவல் தொடர் கதைகளாக வெளிவரும் ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

சந்தா உள்நாடு ரூ. 1–0–0. வெளிநாடு ரூ. 1–8–0.

“நவீனம் ஆபீஸ்”
வேப்பேரி, மதராஸ்.

# ‘ஸ்பார[illegible]’

உலாவும் [illegible] சிறந்த

தமிழ் மாதப் [illegible]திரிகை.

தனிப்பிரதி காலணா.

எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஸ்பாரதி ஆபீஸ்,
72, பாலேஸ் ரோட், மதுரை.